SOUTHALL SHUTTERS (NATIONWIDE)
Shop Front - Roller Shutter - Glass
*Shop Shutters * Remote Control Garage Shutters
*Van Shutters *Door Closers *Industrial Shutters
SALES - SERVICE - REPAIR
LEICHESTER - LONDON - BIRMINGHAM
Tel. Head Office: 020 8843 2235

FREE இலவசம்
The UDHAYAN
# உதயன்
Estd.: 1996
UK's No.1 National Tamil Newspaper

Asian Funeral Care Ltd.
Funeral Services
Welcome: International Transportation and DSS Claims
Tel: 020 8909 3030 (24 Hours)
(Sanjay L. Lodhia)
35 Kenton Park Parade, Kenton Road, Kenton Harrow, Middx. HA3 8DN (Next to Barclays Bank)

e-mail: thelondon@udhayan.freeserve.co.uk UN-31 May 2003 For News & Advertising: 020 8952 5677 16 பக்கங்கள்

# வெஸ்ற்மினிஸ்ரர் எம் பி க்கள் கைவிரிப்பு

## தஞ்சம் மறுக்கப்பட்ட தமிழர்களின் நிலை ஊசலாடுகிறது

அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களுக்கு எந்த் ஒரு உறுதி மொழியையும் வழங்க முடியாது என பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கைவிரித்து உள்ளனர். மே 19 தஞ்சம் நிராகரிக்கப்பட்ட தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுவதை தடுத்து நிறுத்தும் நோக்கில் ஒழுங்கு செய்யப்பட்ட சந்திப்பிலேயே அதில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது இயலாமையை வெளியிட்டு உள்ளனர். அகதிகளைத் திருப்பி அனுப்பும் விடயத்தில் உள்துறை அமைச்சு மிகவும் உறுதியாக இருப்பதாகவும் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு பாராளுமன்றத்தில் எந்த சட்டத் திருத்தத்தையும் கொண்டு வரமுடியாது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

அரசியல் தஞ்சம்கோரிய இலங்கைத் தமிழர்களைத் திருப்பி அனுப்புவதைத் தடுப்பதற்கான குழு Committe to Defend Srilankan Tamil Assylum Seekers - CDSTAS இன் தலைவர் தவத்துரை ஜெயரஞ்சன் தலைமையில் இடம்பெற்ற சந்திப்பில் தெற்கு இல்போர்ட் பா உ மைக் கேப்ஸ், அகதிகள் விடயங்களுக்கான அனைத்துக் கட்சிக் குழுத் தலைவரும் வோல்தம்ஸ்ரோ பா உ ம் ஆன நில் ஜெராட், இலங்கை விடயங்களுக்கான அனைத்துக் கட்சிக் குழுத் தலைவரும் எட்மன்டன் பா உ ம் ஆன அன்ரு லவ் ஆகியோர் கலந்து கொண்டனர். பேச்சு வார்த்தைகள் ஆரம்ப நிலையிலேயே உள்ளதாகக் குறிப்பிட்ட ஜெயரஞ்சன் ஏன் திடிரென இப்போது தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுகிறார்கள் எனக் கேள்வி எழுப்பினார்.

CDSTAS மேற்கொண்ட அரசியல் அழுத்தம் எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை. அரசின் தஞ்சக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் அளவிற்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இல்லை என்பதுவும் அங்கு வெளிப்படுத்தப்பட்டது.

அங்கு பேசிய CDSTAS இன் தனாதிகாரி போஸ் பிரித்தானிய தனது இராணுவத்தை ஈராக்கிற்கும் பொஸ்னியாவிற்கும் அனுப்பி உள்ளது. ஆனால் ஏன் இலங்கைக்கு அனுப்ப முடியாது எனப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கேட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் இனி வருபவர்களை நிறுத்துவதில் ஆட்சேபனை இல்லை என்றும் ஏற்கனவே இங்கு வாழ்ந்து கொண்டிருப்பவர்களை திருப்பி அனுப்புவது தடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் திருப்பி அனுப்பப்படுபவர்களுக்கான ஒரு திட்டத்தை உருவாக்கும் வரை யாரையும் மனிதாபிமான அடிப்படையில் திருப்பி அனுப்ப வேண்டாம் என நியூகாம் கவுன்சிலர் போல் சத்தியநேசன் பா உ க்களைக் கேட்டுக் கொண்டார்.

மூன்று பா உ க்களும் தாம் தொடர்ந்தும் அகதிகளுக்காக தம்மால் இயன்ற வரை முயற்சிப்போம் என்ற உறுதி மொழியை வழங்கினர். நிகழ்ச்சியின் இறுதியில் தமிழ் தஞ்ச விண்ணப்பதாரிகளைத் திருப்பி அனுப்புவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பல நூறு தமிழர்கள் கையெழுத்திட்ட முறைப்பாட்டுப் பத்திரம் பா உ மைக் கேப்ஸிடம் கையளிக்கப்பட்டது.

## ஈராக்கில் பாரிய சவக்குழிகள்

தெற்கு பக்தாத்தில் பாரிய சவக்குழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. தனது சர்வாதிகார ஆட்சியின் போது சதாம் குசெய்ன் தனக்கு எதிரானவர்களை கொன்று புதைத்த இடமாக இது உள்ளது. உறவினர்கள் அங்கிருந்து மீட்கப்படும் ஆயிரக்கணக்கான உடல்களில் தங்கள் உறவுகளை அடையாளம் கண்டு அவர்களுக்கான இறுதிக் கிரியைகளை மேற்கொள்கின்றனர். பல உடல்கள் அடையாளம் காண முடியாமல் போகும் என்ற நிலையும் உள்ளது. இந்த உடல் மீட்பு யாராலும் ஒழுங்குபடுத்தப்படாமல் பொது மக்களாலேயே மேற் கொள்ளப்படுகிறது. இச்சவக்குழி இடம்பெற்ற படுகொலைக்கு முக்கிய சாட்சியமாக உள்ளதால் பாதுகாக்கப்பட வேண்டும் என சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கோரி உள்ளன.

Luxury coach Tour of Germany
26th 28th August
(bank holiday weekends)
Beethoven- Rhine-Drachenfels - Ahr vally (3 days)
Include 2/3* accommodation B/B all transfers, Guided tours, entrance fees, Boat trip, Luxury coach and Ferry crossing.
Only £ 149.00 p.p
Visas arranged
Call 0800 093 1411
Email: info@ttal.co.uk
ATOL & IATA fully bonded

The International
Wood Floor Centre
Laminate Flooring available in 6 colours
£5.95 per sq.m + VAT only
or
Fully Fitted £24.95 + VAT
Engineered Floors
£14.99 + VAT only
Solid Oak Floor
£23.50 + VAT only
Free Estimates, Site Surveyor & Free Delivery
Tel: 020 8951 4395 - 4495
Open 7 Days Fax: 020 951 4251
21 North Parade, Mollison Way, Edgware HA8 5QH
www.internationalwoodfloor.co.uk

ALEAF WINDOWS LTD.
50% OFF Georgian Leaded Windows
FREEPHONE 0800 028 4747



BIRDY & CO
Solicitors
Legal Aid • Private
Immigration
Criminal
Landlord & Tenant
Matrimonial
Personal Injury
Civil Litigation
Conveyancing
Tel: 020 8900 9112
Emergency: 07802 436120
606B High Road
Wembley, Middx. HA0 2AF

Starline©
தமிழில் பேசி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய
Great Deals on:
* Connections
* Upgrades
* Pay As You Go
* Phone Accessory
* Car kit fittings
* Repairs
T-Mobile
Free Phone: 0500 120 121
Open: 10am - 7pm Mon - Sat & 12 - 6pm Sun
235 The Broadway Southall UB1 1ND

A40 Wholesale Ltd.
Specialists in Wines, Beer, Spirits and Softdrinks
* FREE Delivery
* Special Instore Prices
* Credit Cards Accepted
* Open 7 Days
Unit 4
427 Long Drive
Greenford
Middx. UB6 8UH
(Behind B&Q)
Tel: 020 8578 5500
Fax: 020 8578 8889

C & S
DISCOUNT STORE
BABY AND CHILDRENS' WEAR SPECIALISTS
HALF PRICE SALE AT



C&S சவுத்தோல், கிங்ஸ்பரி
Fixed prices Best Prices
714-716 Kenton Road, Kingsbury, Harrow HA3 9QX
109-111 The Broadway Southall Middx UB1 1LN
Open Mon-Sun 10.00am 6.00pm
(Kingsbury closed on Sunders)
TEL: 020 8903 6563

50ற்கும் மேற்பட்ட சினிமா நட்சத்திரங்களை காணத் தவறாதீர்கள்
தமிழ் மெகா ஸ்டார் நைட் 2003
Tamil MEGA STAR NIGHT 2003
~~14.05.03~~ 31.05.03
Bookings 020 8385 2233/07956 198 720/721/722

Tyres • Exhaust • S. Absorbers • Brakes • Services
THE ALIGNMENT CENTRE
Specialist in
Advanced Four Wheel Alignment
FREE Wheel Alignment Check
10% OFF
Unit 7
Sheraton Business Centre
Wadsworth Close
Off Wadsworth Road
Perivale UB6 7JD
Tel: 020 8998 7486
Fax: 020 8998 8615

The UDHAYAN உதயன்
ADVERTISE FOR BEST RESULTS
020 8952 5677

# இஸ்லாமியர்களின் இலண்டன் சமாதான மாநாடு

## சிங்கள - தமிழ் - முஸ்லீம் - மலையகத்தமிழர் முரண்பாட்டுக்கு சமஸ்டியே தீர்வு

இலங்கையில் வாழும் அனைத்து சமூகங்களும் ஒற்றுமையாகவும் கௌரவமாகவும் வாழ சமஸ்டி முறையிலான தீர்வே உகந்தது என சமஸ்டித் தத்துவத்தின் தந்தையாக வர்ணிக்கப்படும் கலாநிதி றொனால் எல் வற்ஸ் தெரிவித்து உள்ளார். மே 24 கரோ சிவிக் சென்ரரில் 'சமஸ்டி - இலங்கை சிறுபான்மையினருக்கான தீர்வு (FEDARALISM - A Solution for Minorities in Sri Lanka) என்ற மையப்பொருளில் இடம்பெற்ற கருத்தரங்கில் எல் வற்ஸ் இக்கருத்தை வெளியிட்டார். இலங்கை வடக்குக் கிழக்கு முஸ்லீம்களின் சபையும் (Council Of North & East Muslims of Sri Lanka - CONEMS) இலங்கை முஸ்லீம்கள் அமைப்பின் பிரித்தானியப் பிரிவும் (Assembly of Sri Lankan Muslims - UK) இணைந்து இந்த கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தன.

சட்டத்தரணி எஸ் எம் பசீர் தலைமையில் நடந்த கருத்தரங்கு கரோ மேயர் மனோ தர்மராஜாவின் வரவேற்புரையுடன் ஆரம்பமானது. இக்கருத்தரங்கிற்கு கனடாவில் இருந்து கலாநிதி றொனால் எல் வற்ஸ் (Fellow Institute of Inter-governmental Relation - Canada,) கனடாவில் இருந்தும் இஸ்லாமிய நிதித் திட்டமிடல் நிபுணர் எ எல் எம் கவூர் நெதர்லாந்தில் இருந்தும் வந்து சிறப்புரை நிகழ்த்தினர்.

அரசியல் ஆய்வாளர் வி சிவலிங்கம் முஸ்லீம்களின் அரசியல் உரிமை பற்றியும் விடுதலைப் புலிகள் முஸ்லீம்களது உரிமையை மறுத்தமை தொடர்பாகவும் தனது உரையில் குறிப்பிட்டார்.

சமஸ்டியே சிறுபான்மையினருக்கான ஒரே தீர்வு எனக் குறிப்பிட்ட முன்னாள் சுதந்திரக் கட்சித் தலைவரும் சர்வதேச சட்ட நிபுணருமான சறத் விஜயசிங்கா விடுதலைப் புலிகள் மீது காரசாரமன தாக்குதலைத் தொடுத்தார். புலிகள் அரசியற் படுகொலைகளை மேற்கொண்டதாக குற்றம்சாட்டிய ஜெயசிங்க ஒரு ஆயுதக் குழுவிடம் சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களை உள்ளடக்கிய வடக்கு கிழக்கை ஒப்படைப்பது ஆபத்தானது எனக் குறிப்பிட்டார். அவர் தனது உரையின் இடையே 'விடுதலைப் புலிகள் சர்வதேச பறையர்களாக இருந்து தற்போது மதிக்கப்டும் பிரதிநிதிகளாக மாறி உள்ளதாக' ஒரு இணையச் சஞ்சிகையை மேற்கோள் காட்டி குறிப்பிட்டார்.

அவரது உரை முடிந்ததும் தலைமை தாங்கிய பசீர் ஜெயசிங்காவின் கருத்துக்கள் அவருடைய தனிப்பட்ட கருத்து என்பதை தெளிவுபுடுத்தினார். மேற்கோளைக் காட்டி குறிப்பிட்டாலும் விடுதலைப் புலிகளை சர்வதேசப் பறையர்களாக குறிப்பிட்டது சமாதான முயற்சிகளுக்கும் புரிந்துணர்விற்கும் எவ்வகையில் உதவும் என உதயன் நிருபர் ஜெயசிங்காவை அணுகிக் கேட்ட போது அவர் தனது தவறை ஏற்றுக் கொண்டு மன்னிப்புக் கோரினார். அவரின் கூற்றை கேள்வி நேரத்தில் தீபம் தொலைக் காட்சி அரசியல் ஆய்வாளர் தாமோதரனும் சுட்டிக் காட்டினார். அதற்கு அவர் சபையில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

CONEMS அமைப்பின் சார்பில் உரையாற்றிய கலாநிதி சித்திக் வடக்கு, கிழக்கு முஸ்லீம்கள் தொடர்ச்சியாக உயிர் ஆபத்துக்களை எதிர்நோக்குவதாகக் குறிப்பிட்டார். வடக்கில் இடம்பெற்றது போல் கிழக்கு மாகாண மூஸ்லிம்கள் வெளியேற்றப்படும் ஆபத்தை மூஸ்லீம் சமூகம் உணர்வதாக அவர் கூறினார். சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு ஆகிவிட்டது எனக் குறிப்பிட்ட கலாநிதி சித்திக் தனது பேச்சின் ஒரு கட்டத்தில், 'தமிழ் - சிங்கள மக்கள் அந்த சமாதானத்தை அனுபவிக்கிறார்கள் ஆனால் மூஸ்லீம்கள் கொல்லப்படுகிறார்கள்' என்று கூறினார். மூதூர், வாழைச்சேனைச் சம்பவங்களை அவர் எடுத்துக் காட்டினார். தனது உரையில் விடுதலைப் புலிகள் முஸ்லிம்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை மதிக்கவில்லை என்ற குற்றச்சாட்டையும் அவர் வைத்தார்.

கருத்தரங்கில் உரையாற்றிய ரவர்கம்லட் இன சமத்துவத்திற்கான இயக்குநர் கலாநிதி சைறாக் மப்றைய்ல் இந்தியாவில் உள்ள சமஸ்டி முறைபற்றிப் பேசினார். அதனையும் ஒரு தீர்வாகக் ஆலோசிக்க முடியும் என அவர் தன் கருத்தை வெளிப்படுத்தினார்.

சமஸ்டிமுறை பற்றிய பல கேள்விகளுக்கும் பதிலளித்த கலாநிதி எல் வற்ஸ் உலகில் 40 வீதமான மக்கள் சமஸ்டி முறையைத் தான் தேர்தெடுத்து இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். சமஸ்டி அடிப்படையிலான தீர்வினால் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பெரும்பான்மை மக்களும் சிறுபான்மை மக்களும் நன்மை அடைவார்கள் என்பதை அவரவர் உணர்வார்கள் அப்போது மூழுமையான சமஸ்டி உருவாகும் அதுவரை சமஸ்டியை நோக்கிய படிமுறையில் நகர வேண்டும் என எமது நிருபரின் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தார் கலாநிதி எல் வற்ஸ் தெரிவித்தார்.

இவ்விழாவில் கரோ கவுன்சிலர் இஸ்மாயில் நிசாம் அத்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் ரொனி மக்நொஸ்றி, கவுன்சில் தலைவர் சா ஆகியோரும் கலந்து கொண்டு இலங்கையில் சமாதானத்திற்கான தமது ஆதரவை வெளிப்படுத்தினர். அசாங்கமும் விடுதலைப் புலிகளும் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று கோரப்பட்டது.

## ஈழத் திரை விழா

ஜூலை இறுதிப் பகுதியில் ஈழவர் திரைக் கலைமன்றம் 'ஈழத் திரைவிழா' ஒன்றை ஏற்பாடு செய்து வருகின்றது. அதில் இடம்பெற உள்ள அழியாத கவிதை குறும்படம் ஏற்கனவே இலண்டனில் அஜீவனின் இயக்கத்தில் உருவாக்கப்பட்டு உள்ளது. பாரிஸில் உள்ள திருமறைக் கலா மன்றமும் ஈழவர் திரைக் கலைமன்றமும் இணைந்து 'ஏகலைவன்' நாட்டுக் கூத்து ஒன்றை படமாக்க உள்ளனர். இவற்றுடன் விருது பெற்று இலண்டனில் ஏற்கனவே திரையிடப்பட்ட எச்சில் போர்வை, நிழல் யுத்தம் ஆகிய படங்களும் திரையிடப்பட உள்ளது.

மேலும் ஓகஸ்ட் மாதம் ஜேர்மன், நெதர்லாந்து கலைஞர்களுடன் சேர்ந்து ஒரு குறும்படம் தயாரிக்கப்பட உள்ளது. இலண்டனில் செப்ரம்பரில் ஒரு மணிநேரக் குறும்படம் தயாரிக்கப்பட இருக்கிறது. ஈழவர் திரைக் கலைமன்றத்தின் ஓராண்டு நிறைவுவிழா ஒக்ரோபரில் விமரிசையாகக் கொண்டாடப்பட இருப்பதாக அதன் ஸ்தாபகர் சட்டவாதி ஜோசப் உதயனுக்குத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் நவம்பரில் ஈழவர் குறுந்திரைப்படப் போட்டியை ஏற்பாடு செய்து வருவதாகவும் தெரிவித்தார்.

## உதயன் பற்றி...

கடந்த 8 வருடங்களாக தமிழ் சமுதாயத்திற்கு பயன் உள்ள வகையில் சமூக நோக்குடன் தேசிய அளவில் அதிக பிரசுரங்களை கொண்டு வெளியிட்டுக் கொண்டிருக்கும் தமிழ் சமூகத்தின் ஒரே தேசிய பிரித்தானிய செய்தி பத்திரிக்கை பற்றி உங்களுக்கு...

பல ஆயிரம் கணக்கான வாசகர்களின் நன் மதிப்பையும் பாராட்டுக்களையும் பெற்ற உதயனை இலவசமாக வாசிக்க அளிப்பவர்கள்:



டாக்டர். இரவிக்குமார் (சற்குரு சுவாமிகள்)
நிறுவனர்-ஆசிரியர்



அன்னை காயத்ரி
நிறுவனர்-துணை ஆசிரியர்



திரு.த.புஷ்பலிங்கம்
விளம்பர பொறுப்பாளர்



திரு.த.ஜெயபாலன்
தலைமை நிருபர்



ர கொன்ஸன்ரைன்
செய்தி ஆய்வு நிருபர்

துணை நிருபர்கள் :
கே அரவிந்தன் (இலண்டன்)
ஜெ வெற்றிச்செல்வன் (இலண்டன்)
கா சாந்தி (இலண்டன்)
கெ பாலன் (ஐரோப்பா)
வி அருள் (கனடா)
இ சுரேஸ் (கனடா)

மற்றும் :
புலனாய்வு நிருபர்கள், விநியோகஸ்தர்கள்

**உதயன் : அதிக பிரதிகளை பிரசுரிக்கும் பரந்த விநியோகத்தைக் கொண்ட தமிழ் மக்களின் ஒரே சமூகப் பத்திரிக்கை.**

தொடர்புகளுக்கு: Global News Media **GNM (PVT) LTD.**, 25-27 High St., Edgware, Middx. HA8 7EE **Tel: 020 8952 5677**

**உதயன் நடுநிலைமையை கொண்ட மக்களின் நண்பன். உதயன் எப்பொழுதும் உண்மைகளை மட்டுமே ஒருசார்பற்றமுறையில் பேதமின்றி உண்மைகளை வெளியிடும் ஒரே பத்திரிக்கை.**

The UDHAYAN உதயன்
ADVERTISE FOR BEST RESULTS
020 8952 5677

Katherine & King's College of London
Minavil House, Ealing Road, Wembley HA0 4EL
* Excellent Location: opposite Alperton Tube Station, good transportation links
* Multi-Disciplines: Accounting, Management, Computer, English
* Various Levels: From Certificate to Degree suitable for anyone over 16.
* Flexible Payment Options: Ten Monthly Instalments
* Diverse Study Modes: Full-time, Part-time (Daytime, Evening, Weekend.)
* Starting Date Available All Year Round
Please call 020-8795 1600 for more......
Monday – Friday (9am – 6pm)

Boston College of London
The Best College of the year 2002
Certificate, Diploma, Advance Diploma & PGD in
✓ TTH Travel Tourism & Hospitality Management
✓ Business Administration ✓ ACCA, CAT (Accountancy)
✓ Hotel Management ✓ BBA, MBA, BIT, MIT & PhD
✓ Journalism Management ✓ IT
Accredited by the British Accreditation Council for Independent Further and Higher Education
Boston College of London has been named award winner for the year 2002 in the category of International Education & Training by the UK based Leeds & Yorkshire Times in June 2002.
* Small size classes
* Highly qualified lecturers
* Help with visa application & Accommodation
* Airport collection facility
15 Leeland Road, West Ealing, London W13 9HH, UK
Tel: 0044-208-8101 888 Fax: 0044-208 8100848
email: info@bcluk.co.uk
Web: www.bcluk.co.uk

"The UDHAYAN" Published by [Global News Media] GNM (PVT) LTD. in London at, I Floor 25-27 High Street Edgware, Middx. HA8 7EE U.K. Tel: 020 8 905 7775 Fax: 020 8952 5677 e-mail: thelondon@udhayan.freeserve.co.uk

# கலாச்சார மாலை



இலண்டன் தமிழ் மையம் நடாத்திய கலாச்சார மாலை ஏப்ரல் 26ம் திகதி லோகன் மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது. மங்கள விளக்கேற்றி, ஹரினி தேவராஜன் உரையுடன் ஆரம்பமான இக்கலாச்சார நிகழ்வில் வீணை, புல்லாங்குழல், வாய்ப்பாட்டு என பல் கலைநிகழ்வுகள் இடம்பெற்றது. இவ்வைபவத்தில் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பரிசுகளும் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியின் நிறைவாக மாணவர்களின் சிவா பார்வதி கல்யானம் என்ற நாட்டிய நாடகம் இடம்பெற்றது.

# தமிழகத்தில் இருந்து பாதிரியார் வருகிறார்



திருத்தந்தை இக்னேசியஸ்

தமிழகத்தில் மிகவும் அறியப்பட்ட திருத்தந்தை வி இக்னேசியஸ் யூன் மாதம் இலண்டன் வருகிறார். இலண்டனில் ஒரு வாரம் விசேட ஆன்மீக உரைகளை நடத்த உள்ளார். வெம்பிளி, வெம்பிளி பார்க், மனோபார்க், நோர்த்ஹோல்ட் ஆகிய பகுதிகளில் உள்ள தேவாலயங்களில் இவரது அருளுரை இடம்பெற இருக்கிறது.

தத்துவப்பேராசிரியரான இவர் அமெரிக்க கொன்சாகா பல்கலைக் கழகத்தில் மனோதத்துவத்தில் பட்டம்பெற்றவர். மனோதத்துவ சமூகநலக் கல்வி மையம் என்ற அமைப்பை நிறுவி அதன் இயக்குனராகவும் இருக்கிறார். இயேசுவே ஆண்டவர் என்ற மாத இதழையும் நடாத்தி வருகிறார்.

# தமிழ் மூலத்தின் இலத்திரன் பதிவு

பிரித்தானிய நூலகத்தில் உள்ள அரிய தமிழ் நூல்களை இலத்திரன் பதிவு (டிஜிற்றல்) செய்யும் திட்டம் ஒன்றுடன் சுற்றாடல் இரசாயனவியலாளர் கலாநிதி நாராயணன் கண்ணன் பிரித்தானிய நூலக அலுவலர்களை அண்மையில் சந்தித்து உள்ளார். பிரித்தானிய நூலகத்தில் பல அரும்பெரும் தமிழ் நூல்கள் மற்றும் மூலப் பிரதிகள் உள்ளன. அவற்றை இலத்திரன் பதிவு செய்வதில் என் கண்ணன் மிகவும் ஆர்வத்துடன் உள்ளார். இவர் Tamil Heritage Foundationன் இயக்குநர் என்பது குறிப்பிடத் தக்கது.

தமிழ் முன்னோர்கள் விட்டுச்சென்ற மூலப்பிரதிகளான ஓலைச் சுவடிகளை எல்லாம் இலத்திரன் பதிவு செய்வது பற்றிய விடயங்களில் என் கண்ணன் ஈடுபட்டு உள்ளார். ஜேர்மன் கெய்ல் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக உள்ள இவர் தமிழ்ப் பணியில் மிகவும் ஆர்வமுடன் செயற்பட்டு வருகிறார்.

# மகாஜனாக் கல்லூரிக்கு புதுப் பொழிவு மூன்றரைக்கோடி ரூபாய் வெளிநாட்டு நிதி ஒதுக்கீடு

2010ல் நூற்றாண்டு விழாக் காணும் மகாஜனாக் கல்லூரிக்கு புதுப் பொழிவு வழங்கும் செயற்திட்டம் ஏப்ரல் 19ல் நடைபெற்ற மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது. கொழும்பு [illegible]ாலிடே இன் இல் இடம்பெற்ற சர்வதேச பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகளின் சந்திப்பிலேயே இதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இம்மாநாட்டில் ஐரோப்பா, கனடா, அமெரிக்கா, கொங்கொங், அவுஸ்திரேலியா என உலகின் பல்வேறு பாகங்களிலும் பரந்து வாழ்ந்த அக்கல்லூரியின் பழைய மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர். இலண்டனில் இருந்து இம்மாநாட்டில் 9 பேர் கலந்து கொண்டனர்.

மானிப்பாய் இந்துக்கல்லூரிப் பழைய மாணவரும் இலண்டனின் முதல் தமிழ் செல்வந்தரும் தீபம் தொலைக்காட்சியின் முக்கிய பங்காளியுமான பத்மநாபனும் அமெரிக்காவில் இருந்து வந்திருந்த சன் சுந்தரும் விழாவை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். அவ்விழாவில் பத்மநாபன் 10 இலட்சம் ரூபாயை வழங்கினார். நெதர்லாந்தில் இருந்து கலந்து கொண்ட இலங்காநேசன் 25 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள திட்டத்துக்கான அனுமதியை நெதர்லாந்து அரசசார்பற்ற நிதி அமைப்புகளிடம் இருந்து பெற்றுக்கொடுத்தார். இவர் அந்நிதி அமைப்பின் பொறுப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின் படி கல்லூரிக்கான முழுமையான மின்சார, நீர் விநியோகம் ஏற்படுத்தப்படுவதுடன் முழுமையான தளபாட வசதிகளும் செய்து கொடுக்கப்பட உள்ளது.

பொற்காலத்தை நோக்கி மகாஜனாக் கல்லூரி மீண்டும் பொழிவுற என்ற தலைப்பில் இடம்பெற்ற ஒரு நாள் மாநாட்டில் வழமையான கல்லூரியை புதுப் பொழிவுறச் செய்யும் செயற் திட்டங்களுடன் முற்றிலும் புதிய திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. அதன்படி

1) கல்லூரிக்கு மாணவர்களை வழங்கும் சுற்றாடலில் உள்ள 5 ஆரம்பப் பாடசாலைகளுக்கு உதவ வேண்டும் என்ற திர்மானத்தை ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி அப்பாத்துரை கொண்டு வந்தார்.

2) எழுத்தாற்றலை ஊக்குவிக்கும் வகையில் வெளியீட்டுத்துறை உருவாக்கப்பட்டு மகாஜனாக் கல்லூரி மாணவர்களின் படைப்புகள் அதன் மூலம் ஆண்டுதோறும் வெளியிடப்பட வேண்டும் என்ற திட்டத்தை கோகிலா மகேந்திரனும் இலண்டனில் வாழும் பழைய மாணவர் சபேசனும் கொண்டு வந்தனர்.

3) அனைவருக்கும் பொதுவான ஸ்ரேடியம் ஒன்றை நிர்மானிக்கும் தீர்மானம் இலண்டன் பிரதிநிதி கெங்காதரனால் கொண்டு வரப்பட்டது.

இத்தீர்மானங்கள் 3ம் அங்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தற்போது மகாஜனாக் கல்லூரி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியினுள்ளேயே காணப்படுகிறது. 90 வீதமான தெல்லிப்பளைப் பிரதேசம் பாதுகாப்பு வலயத்தினுள் தான் உள்ளது. நிரந்தர சமாதானம் ஏற்படாத நிலையில் பெரும் தொகை நிதியை கல்லூரிக்கு முதலிடுவது அறிவான செயலா என எமது நிருபர் இலண்டன் பழைய மாணவர் சங்கச் செயலாளர் கெங்காதரனிடம் கேட்டதற்கு சமாதானம் ஏற்படும் அல்லது ஏற்படுத்தப்படும் என்று தாம் நம்புவதாகப் பதிலளித்தார். மற்றுமொரு கேள்விக்குப் பதிலளித்த அவர்; அரசியல் தலையீட்டைத் தவிர்ப்பதற்காகவே, 4 இலட்சம் ரூபாய் செலவில் கொழும்பில் இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது எனத் தெரிவித்தார்.

# உறுப்பினர்கள் வெளியேற்றம் சங்கடத்தில் TR-TEC பாடக் கட்டணத்தை குறைக்க வேண்டுகோள்

சர்ச்சைக்குள்ளான £500,000 ஆண்டு வருமானமுடைய TR-TEC அமைப்பில் இருந்து மற்றுமொரு அறக்கட்டளை உறுப்பினர் வெளியேறி உள்ளார். கடந்த சில ஆண்டுகளாக அறக்கட்டளை உறுப்பினராக இருந்த மாசிலாமணி என்பவரே ஏப்ரல் மாதம் பிற்பகுதியில் தனது உறுப்புரிமையில் இருந்து விலகி உள்ளார். அண்மைக்காலமாக இவ்வமைப்பின் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் வந்ததும், நீதி மன்றத்தில் இதன் நிர்வாகம் சீர்கேடானது என நிரூபிக்கப்பட்டதும் உதயன் வாசகர்கள் அறிந்ததே. மாசிலாமணியின் வெளியேற்றம் அவ்வமைப்பிற்கு மற்றொரு அடியாக அமைந்து உள்ளது. ஏற்கனவே இவ்வமைப்பில் இருந்து வெளியேறிய அதன் தனாதிகாரியான கனகராஜா தனக்கு கணக்குகள் காட்டப்படவில்லை என்றும் அதனாலேயே வெளியேறியதாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இங்கு இடம்பெற்ற ஊழல், நிர்வாகச் சீர்கேடுகள் அம்பலப்படுத்தப்பட்டும் நிர்வாக மாற்றம் எதுவும் மேற்கொள்ளப்படாததால் தான் மாசிலாமணி வெளியேறியதாக ஊகிக்கப்படுகிறது. கூட்டங்களுக்கு சமூகமளிக்காவிட்டாலும் பரவாயில்லை பெயருக்கு இருங்கள் என TR-TEC உறுப்பினர் இறங்கி இருப்பதாக அவ்வமைப்புடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மேலும் நிர்வாகம் மாற்றியமைக்கப்பட்டு நேர்மையான, செயற்திறன் மிக்க நிர்வாகம் உருவாக்கப்பட்டால் பாடத் திட்டங்கள் ஆகக்கூடியது £50 க்குள் கற்பிக்கக் கூடியதாக இருக்கும் என ஹரிங்கே கவுன்சிலின் Economic Development Officer ரி ஜீவரட்ணம் தெரிவிக்கிறார். உள்ளாட்சி மன்றங்கள் மேற்கொள்ளும் பயிற்சிகள் அவ்வாறே நடத்தப்படுகிறது என்றும் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு ஆண்டும் மூன்றில் ஒரு பங்கு அறக்கட்டளை உறுப்பினர்களை புதிதாக சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது அவ்வமைப்பின் விதி முறைகளில் ஒன்று. ஆனால் இங்குள்ள அறக்கட்டளை உறுப்பினர்கள் முகாமையாளர் சிறிதரனின் உறவினர்களும் நண்பர்களும் என்ற குற்றச்சாட்டும் இவ்வமைப்பு மீது உள்ளது. இவ்வாறான பொது அமைப்புகளில் குறிப்பிட்ட சில உறுப்பினர்கள் மீண்டும் மீண்டும் தெரிவு செய்யப்பட்டு வருவதே அங்கு ஊழல், நிர்வாகச் சீர்கேடுகளுக்கு வழிவகுக்கின்றது என பொது அமைப்புகளின் முகாமைத்துவம் பற்றிய ஆய்வு தெரிவிக்கிறது.

# பெற்றோல் நிலைய காசாளர் வேலைநீக்கம் உரிமையாளருக்கு எதிராக வழக்கு

லூசியம் ரோட்டில் உள்ள ஜெட் பெற்றோல் நிலையத்தில் இருந்து தகுந்த காரணமில்லாமல் வேலை நீக்கம் செய்யப்பட்டதாகக் கூறி காசாளர், அதன் உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளார். தில்லைநாதன் இராகவன் (26) என்ற இளைஞரே தன்னை வேலைநீக்கம் செய்தது அநியாயமானது என உரிமையாளர் இராசையாவிற்கு எதிராக வழக்குத் தொடுத்து உள்ளார். இவ்வழக்கு குறொய்டன் தொழிலக நீதிமன்றத்தில் ஏப்ரல் முதல் வாரம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4 ஆண்டுகளாக அவ் எரிபொருள் நிலையத்தில் பணியாற்றிய ராகவன் இவ்வாண்டு ஜனவரி 20ல் வேலைநீக்கப்பட்டதாக குற்றம்சாட்டுகிறார். ஆனால் இராகவன் தானாக விரும்பியே வேலைக்கு வராமல் விட்டதாக உரிமையாளர் தெரிவிக்கிறார். இவ்வழக்கில் இராகவனுக்கு சாட்சியளிக்க அங்கு வேலை பார்த்த ரூபன் என்ற முன்னாள் காசாளரும் வந்திருந்தார்.

தான் வேலைநீக்கம் செய்யப்பட்டது தொடர்பாக Citizen Advice Bureau ல் ஆலோசணை பெற்ற ராகவனுக்கு அவர்களே சட்டப்பிரதிநிதியை ஒழுங்கு செய்துள்ளனர். வழக்கு வரும் யூன் மாதம் 18ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டு உள்ளது.

# Cannes Film Festivalக்கு இரு சிங்களப் படங்கள் ஒரு கேரளப் படம்

மே 14 முதல் 25 வரை பிரான்சில் நடைபெறும் கான்ஸ் சர்வதேச திரைப்பட விழாவுக்கு இரு சிங்களப் படங்களும் ஒரு கேரளப் படமும் தெரிவு செய்யப்பட்டு இருந்தது. பழம் பெரும் இயக்குநரான லெஸ்ரர் ஜேம்ஸ் பிரிசின் (84) Mansion By The Lake ம் விமுத்தி ஜெயசுந்தராவின் (26) Empty For Love ம் இலங்கையில் இருந்து தெரிவு செய்யப்பட்டு இருந்தது. கேரள இயக்குநர் முரளி நாயரின் The Stroy That Begins At The End என்ற படம் இந்தியாவில் இருந்து தெரிவு செய்யப்பட்டு இருந்தது.

இப்படங்கள் இறுதிப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்படாவிட்டாலும் அத்திரைப்பட விழாவிற்குத் தெரிவு செய்யப்பட்டதே அப்படங்களுக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகக் கொள்ளப்படுகிறது. சர்வதேச தரத்திற்கு இப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதற்கான அங்கீகாரமாக இத்தெரிவு அமைந்து உள்ளது. இதில் ஜேம்ஸ் பிரிஸின் 4 படங்கள் ஏற்கனவே இத்திரைப்பட விழாவிற்குத் தெரிவு செய்யப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

ALLIED MOTORS U.K.
MECHANICAL & CRASH REPAIRS
Specialists in British, Continental and Japanese Cars.
Servicing, repairs, tuning, insurance work undertaken
Breakdown Service
MOT while you wait
Open: MON - FRI 8.30am to 7.00 pm
SAT 8.30am to 5.00pm
Abbey Estate, Mount Pleasent, Wembley, Middx. HA0 1QT
Tel: 020 8903 5466
Fax: 020 8900 0120

Excellent position
Double Unit
Vegetarian
Restaurant for Sale
658/660 Kingsbury Road,
London NW9 9HN
Call Yogi
07811 275522

F/h Shop with 2 Bed Flat
CONVENIENT STORE + Off-Licence
POST OFFICE (7 miles from Croydon)
FOR SALE
Takings - 5,000
P.O. Salary - 16,000
£ 230,000
Tel: 01883 343692

CAM Carpets & Furnitures
NEWLY OPEN Offers Tel: 8903 7350
BUDGET BED £ 59
ORTHOPAEDIC BED £ 89
Italian
DINING Set + 6 Chairs £ 535
& CARPETS
We can beat any quote
424, HIGH ROAD, WEMBLEY

EDITOR: Dr T RAVIKUMAR Chief Reporter: T.JEYABALAN Advertising Manager: T. PUSHPALINGHAM FREELY Circulated throughout UK, FRANCE & GERMANY

# இலங்கை இந்திய கூட்டுத் தயாரிப்பு

# In the Name of Buddha - புத்தனின் பெயரால்

ஈழத் தமிழர்களின் நியாயமான போராட்டத்தை சித்தரிக்கும் 'புத்தனின் பெயரால்' என்ற திரைப்படம் மே மாதம் 16ம் திகதி முதல் பிரித்தானியாவின் 4 பிரதான பகுதிகளில் திரையிடப்படுகிறது.


குறொய்டன், வெஸ்ற் என்ட் (லெஸ்ரேர்ஸ்குயர்) ஆகிய இடங்களில் வோனர் விலேஜ் திரையரங்கிலும் பெல்தம், இல்போர்ட் ஆகிய இடங்களில் சினிவேள்ட் திரைஅரங்கிலும் ஹரோ சபாரி சினிமாவிலும் இருவாரங்களுக்கு தினமும் இரு காட்சிகள் காண்பிக்கப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்ட சந்தோஸ் சிவனின் 'ரெறறிஸ்ற்' (பயங்கரவாதி) ற்குப் பின் புத்தனின் பெயரால் என்பது பிரித்தானியா திரைக்கு வருகிறது.

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் தொடர்பாக வெளியிடப்படும் மிகவும் முக்கியமான இப்படம் இலண்டனிலும் இந்தியாவின் கேரளா மாநிலத்திலும் படமாக்கப்பட்டு உள்ளது. Rajesh Touchriver ன் இயக்கத்தில் உருவாக்கப்பட்டுள்ள இப்படத்தின் மூலக் கதையை சாயி ஜோர்ச் 9 ஆண்டுகளுக்கு முன் தமிழ் நண்பர் ஒருவரிடம் இருந்து பெற்ற கதையை அடிப்படையாக வைத்து ஆழமான ஆய்வை மேற்கொண்டு இப்படம் வலுவூட்டப்பட்டு உள்ளது.

அமெரிக்காவில் பெவர்லி ஹில்ஸ் திரைப்பட விழாவில் முதற் படமாக வெளியிடப்பட்ட இப்படம் நியூபோட் பீச் திரைப்பட விழாவில் சிறந்த திரைப்படமாக பார்வையாளர்களால் தெரிவு செய்யப்பட்டது. நான்கு சர்வதேச திரைப்பட விழாவிற்கும் இத்திரைப்படம் தெரிவு செய்யப்பட்டது.

இலங்கைத் தமிழர்களின் கதைக்கு மலையாளியான சாயி ஜோர்ச் உயிர்கொடுத்து உள்ளார். பல இந்தியக் கலைஞர்களின் ஒத்துழைப்புடன் இலங்கையரான கெ சண்முகதாஸ் இப்படத்தை தயாரித்து உள்ளார். ஒரு சினமாத் தயாரிப்பாளனாக இல்லாமல் பல படி மேலே சென்று சண்முகதாஸ் எடுத்துக் கொண்ட முயற்சியும் தமிழ் சரளமாகப் பேச முடியாவிட்டாலும் அத்திரைப்படத்தை பலரும் பேசும்படி வைத்த சாயி ஜோர்ச்சிற்கும் பாராட்டுகள் குவிந்து உள்ளன.

கால் நுாற்றாண்டுக்கும் மேலாக நடந்த ஈழவிடுதலைப் போராட்டத்தின் ஒளியியல் பதிவாக இப்படம் அமைந்து உள்ளது. ஈழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தன்மையை சம்பந்தப்பட்ட மக்களின் அமைப்புகளே சர்வதேச அளவில் கொண்டு செல்லத் தவறி இருந்த நிலையில் சிலரின் தனிப்பட்ட முயற்சியில் இப்படம் உருவாக்கப்பட்டு உள்ளது. மேலும் மூலக்கதையை எழுதியவரும் இயக்கியவரும் இப்போராட்டத்தில் சம்பந்தப்படாததால் படத்தில் உண்மைகள் உணர்ச்சிகளின் அடிப்படையில் இல்லாமல் ஆய்வின் அடிப்படையில் படமாக்கப்பட்டு உள்ளது என ஊடகவியலாளர் அரவிந்தன் குறிப்பிட்டார்.




# சீதனம் கேட்டவர் ஜெயிலில்

நிசா சர்மா (21) என்ற மணப் பெண்ணின் பெற்றோரை அதிக சீதனம் கேட்டு மிரட்டிய மணமகன் கைது செய்யப்பட்டார். மணநாளன்று மணப்பெண்ணின் தந்தையை மிரட்டிய மணமகன் திருமணத்தை நிறுத்தும் அளவிற்குச் சென்றார். நிலைமையைப் புரிந்து கொண்ட நிசா உடனடியாக பொலிஸாருக்கு தொலைபேசியில் தகவல் கொடுத்தார் அதனை அடுத்து மணமகனை டெல்லிப் போலிஸார் கைது செய்தனர். மணமகனுடைய உறவினர்கள் பலரும் தலைமறைவாகினர். இச்செய்தி பரவியதும் நிசாவினுடைய வீட்டை உள்ளூர், சர்வதேச ஊடகங்கள் முற்றுகையிட்டன. பெண் விடுதலை அமைப்புகள் நிசாவை முன்மாதிரியாகக் காட்டின. நிசாவை சந்திப்பதற்காக அவரது வீட்டில் மக்கள் வரிசையில் காத்து நின்றனர் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இச்சம்பவம் பற்றித் தெரிவித்த நிசா தான் பெரும் அவமானத்தில் இருந்து தப்பி இருக்கிறேன் என்பதே தனக்கு மிகவும் ஆறுதலாக இருப்பதாகக் குறிப்பிட்டார். இதற்கிடையே அவரை அரசியலில் வேட்பாளராக்க உள்ளூர்க் கட்சி ஒன்று முன் வந்திருந்தது. ஆனால் அதனை ஏற்க நிசா மறுத்து உள்ளார். நிசாவின் இந்தத் துணிச்சலான செயற்பாடு இந்தியப் பெண்களுக்கு ஒரு முன்னுதாரணமாகக் கொள்ளப்படுகிறது.

FURNITURE KING
FREE LOCAL DELIVERY
FREE ASSEMBLEY
3 Door Pine Wardrobe From £199.99
Double Bed From £99.99
2 Door Pine Wardrobe From £129.99
Single Bed From £69.99
5+2 Drawer Pine Chest From £89.99
Dining Sets Table + 4 Chairs From £99.99
3 Drawer Pine Chest From £34.99
Nest of Tables, Coffee Tables, Bookcases, Computer Desks, etc. From £29.99
BELMONT CIRCLE, HARROW
020 8931 8686
www.furniture-king.co.uk
30 Watling Avenue, Burntoak, Edgware. Tel: 020 8951 5513
info@furniture-king.co.uk

FUNTASIA
The Party Shop

BALLOON PRINTING
BALLOON DECORATING
HELIUM HIRE
PARTY WARE & NOVELTIES
BRIDAL FAVOURS
SOFT TOYS
FANCY DRESS, WIGS, MASKS
JOKES & MAKE-UP
ADULT JOKES & NOVELTIES
PERSONALISED NAPKINS
AND BOOK MATCHES.
RUBBER STAMPS SERVICES
சகலவிதமான
வைபவங்களுக்கும்
தேவையான அலங்கார
சோடனைகளுக்கு நாடுங்கள்
Funtasia
229 KENTON ROAD, KENTON, HARROW, MIDDLESEX HA3 0HD
Tel/Fax: 020-8907 1333 www.FuntasiaWorld.com

TRICO SHIPPING WORLDWIDE
Small cartons and large container
Full House packing and shipping to any destination of your choice.
Special Rates:- COUCHIN, TREVENDRAM, BOMBAY - CHENNAI
* Two regular shipments to Colombo per month
* Goods arrive within 17days
20 YEARS IN SERVICE
Call us for a friendly personal service
Tel: 020 8888 8787
Fax: 020 8888 5445
E-mail: trico@btclick.com
UNIT 4 - BUILDING C BUSINESS CENTRE, CLARENDON ROAD, WOODGREEN, LONDON N22 6XJ

Panesar Electrical Co.
EST 1981
மலிவு விற்பனை

12W Split Load Consumer Unit RCD + Main Switch 8 MCBs Only £85.95
12V LV Lamps 20W/35W/50W Buy 10 for £10.00 and get 2 free!
Mains Spotlight C/W 3x 50w Lamps Only £23.95! Chrome, Brass or White
Xpelair DX100T 4" Timer Fan C/W Wall + Window Kit Only £22.95! While Stocks Last!
OFFERS ONLY AVAILABLE WITH THIS ADVERT
ALL PRICES INCLUDE VAT
364 High Street North, Manor Park, London E12 6PH
Tel: (020) 8472 1873, Fax: (020) 8471 6271

SiGN FiT
The Company of Dynamic Ideas.
Specialist in Illuminated, Non-Illuminated, Menu System & Menu Photos.
Challenge: We will beat any Price.
Best Deal Best Design Best Service
Tel:020 8552 1194
Fax:020 8548 1047 Mob:07956 274762
482 Barking Road, East Ham London E6 2LT
Web: www.signfituk.com E-mail: sales@signfituk.com

இந்து தகவல் ஏடு
இரண்டாம் வெளியீடு 2003
மிக அதிக புதிய விளக்கங்களுடன்
விரைவில் வெளிவருகிறது

கண்ணியமான நல்ல நோக்குடன் வெளிவரும் இந்த இந்து சமய தகவல் ஏட்டினை ஒவ்வொருவரும் விரைந்து சென்று பெற்றிடுவீர்
இலவசம்
இலவசம்
இலவசம்

உதயன் வாசகர்களுக்கு...
£10 பவுண்கள் மட்டுமே.
GNM (PVT) LTD. (Udhayan-Subscription)
25/27 High Street Edgware, Middlesex HA8 7EE

பிறந்தநாள் மற்றும் சிறு விளம்பரங்களுக்கு 020 8952 5677

இறையருள் அரசி அன்னை காயத்ரி

வேதனைகள் தீர்க்க வல்லவர். குறைகளை போக்கிட வல்லவர்
இறையருள் அரசி அன்னை காயத்ரி.
உங்களின் வாழ்கையில் ஏற்படும் துன்பங்கள் மாறிடவும் தடைகள் யாவும் விலகிடவும் காணுங்கள் அன்னையின் தரிசனம், விலகாத நோய் விலகும், தீராத பிணி அகலும், மாறாத வேதனைகள் யாவும் நீங்கும், உங்களின் பிரச்சனைகள் எதுவாயினும் தடைநீங்கி வழி பெற்றிட தொடர்பு கொள்ளுங்கள் 020 8952 7775

# ஜேர்மனில் தமிழ் எழுத்தாளர் சங்கம் உதயம்

ஏப்ரல் 19 சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் ஜேர்மன் டியூர்ஸ்பேர்க் நகரில் எழுத்தாளர் ஒன்றுகூடல் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்ச்சியை ஜேர்மன் கல்விச் சேவை செயலாளர் திரு. சிறிஜீவகன் தலைமையேற்று தொகுத்து வழங்கினார். இந்த நிகழ்வில் ஜேர்மன் தமிழ் எழுத்தாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்டு இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. மேற்படி நிகழ்ச்சியை 'மண்' சஞ்சிகை ஆசிரியர் வ. சிவராசா, 'ஈழம்' பத்திரிகை ஆசிரியர் ராஜகருனா, கவிஞர் மட்டுவில் ஞானகுமாரன், கவிஞர் சிவனேசன் ஆகியோர் ஒழுங்கு செய்திருந்தனர்.

ஆரம்பத்தில் அதிகம் படிப்பறிவில்லாத எழுத்தாளர்களால் உருவாக்கப்பட்டு இன்று ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களை உருவாக்கி உன்னத நிலையை அடைந்திருக்கின்ற மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், அங்கு உதாரணமாகக் காட்டப்பட்டது. உன்னத நிலையை அடைந்திருக்கின்ற மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் வளர்ச்சியையும், இன்று அதற்குரிய தகுதியும், தமிழ் மொழிக்கு ஆற்றிவரும் தொண்டும் அச்சந்திப்பில் முன்னுதாரணமாகக் காட்டப்பட்டது.

200 ஆண்டுகளில் தமிழ் மொழி அழிந்து விடுமென்று யுனஸ்கோ நிறுவனம் கூறியிருப்பதாக கவிஞர் மட்டுவில் ஞானக்குமாரன் கூறினார். இதைப் பொய்யாக்க தமிழ் எழுத்தாளர் சங்கம் பெருமுயற்சி எடுக்க வேண்டும். எமது புத்தகங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கான ஆவணக்காப்பகம் அவசியம். போன்ற கருத்துக்கள் அங்கு ஆணித்தரமாக வைக்கப்பட்டது. மேலும் இன்று உருவாகும் ஜேர்மன் தமிழ் எடுத்தாளர் சங்கம் என்றும் பல எழுத்தாளர்களை தன்னோடு இணைத்து தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்ற வேண்டும் எனவும் அங்கு கேட்டுக் கொள்ளப்பட்டது.

இவ் ஒன்றுகூடலில் சிறுவர் தமிழ்க் கல்வி எழுத்தாளர்களின் ஆக்கங்கள் அதன் அச்சீடுகள், பதிப்பகங்களின் தேடல், வாசிப்பின் அவசியம் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. எழுத்தாளர்கள் நகுலா சிவநாதன், கருணாகரமூர்த்தி, வேலாயுதம், ஏகானந்தராசா. சிறிஸ்கந்தராசா, நாச்சிமார் கோவிலடி ராஜன், ராஜன் முருகவேள், புத்திசிகாமணி, சில்லையூர் சிங்கராசா, ரவீந்திரன், தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர்.

தமிழ் ஜேர்மன் எழுத்தாளர்கள் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு அதன் தலைவராக வில்லிசை வேந்தனும், எழுத்தாளருமான நாச்சிமார் கோவிலடி ராஜன், உபதலைவராக மண் சஞ்சிகை ஆசிரியர் வ.சிவராசா, செயலாளராக ஈழம் பத்திரிகை ஆசிரியர் ராஜகருணா, உப செயலாளராக மட்டுவில் ஞானக்குமாரன், பொருளாளராக சிறிஸ்கந்தராசா ஆகியோரும், பல நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

**BABA Cash & Carry**
*West London's Finest*
*Specialist in*
Beers, Spirits, Wines & Minerals
**Tel: 020 8589 0000**
Unit 1C, Chailey Industrial Estate
Pump Lane, Hayes, Middx. UB3 3NB

# தாயக மக்களுக்கு பாரிஸில் நிதி வசூல்

பாரிஸ் கல்வி நிலையத்தினர் தமிழீழ நுண் கல்வி திட்ட நிதிக்காக கலை மாலை நிகழ்வொன்றை ஏப்ரல் 13ல் நிகழ்த்தினர். அதேபோல் அன்றைய தினம் தமிழ்ச் சோலை ஆண்டு விழா நிகழ்வும் திருமறை கலாமன்றத்தின் கலை நிகழ்வும் இடம்பெற்றிருந்தன.

திருமறை கலாமன்றத்தின் நிகழ்வுகள் சிறப்புற இருந்ததாகவும் 'திருப்பாடுகள்' எனும் நாடகத்தில் 63 க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கு பற்றி சிறப்புற அதனை நிகழ்த்தியதாகவும் இலண்டனில் இருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பறிஸ்டர் ஜோசப் உதயனுக்குத் தெரிவித்தார். இத்தனை கலைஞர்கள் நேர்த்தியாகவும் திறமையாகவும் ஒரு நாடகத்தை ஐரோப்பிய மண்ணில் நிகழ்த்தியது இதுவே முதற் தடவை எனக் குறிப்பிட்டு தன் ஆச்சரியத்தை வெளிப்படுத்தினார்.

இந்நிகழ்வில் புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் கல்வி அவசியமா? அவசியமில்லையா? எனும் பட்டிமன்றத்தை தமிழ்ச்சோலைச் சிறார்கள் நிகழ்த்தினார்கள். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருந்த சிறிஸ்கந்தராசா இன்றைய சமாதான முயற்சிகள் குறித்தும் சிறிலங்காவின் அரசியல் சதுரங்க ஆட்டம் குறித்தும் விளக்கிப் பேசினார். இன்னும் பல்வேறு நடன, நாட்டிய நிகழ்வுகள் நிகழ்ந்தன. இளையநிலா இசைக் குழுவினரின் இசை கானங்கள் ஒலிக்க நிகழ்ச்சிகள் இனிது நிறைவுப்பெற்றது. தாயகப் பாடகர் மைக்கல் கொலின்ஸ் அவர்களும் இவ்விசைக் குழுவினர்களுடன் இணைந்து சிறப்பித்தார்.

**DISCOUNT CARPETS & FURNITURE**
* Large selection of Carpets, Vinyl, Beds & Wood Flooring
* Unbeatable Warehouse Prices To the Public
* Call us on
**020 8838 4232 / 4248**
Fax: 020 8838 4233
Unit C Corner of Bashley Road & St. Leonards Road
Park Royal, London NW10 6ST

# ரொறன்ரோ தமிழ் இளைஞர்களின் முன்னுதாரணம்

கிழக்கு ரொறன்ரோ பகுதியின் வியாபார மையத்தில் ஒவ்வொரு ஞாயிறும் தமிழ் இளைஞர் யுவதிகளின் சந்திப்பு இடம்பெற்று வருகிறது. கனடாவில் இடம்பெற்று வந்த வன்முறையை கட்டுப்படுத்துவதில் அங்குள்ள இளைஞர் அமைப்புகளின் பங்களிப்பு மிகவும் வரவேற்கப்பட்டு இருந்தது. தற்போது கிழக்கு ரொறன்ரோ பகுதியில் வாராவாரம் இடம்பெறும் இச்சந்திப்புக்கு பல பகுதிகளில் இருந்தும் இளைஞர், யுவதிகள் கலந்து கொள்கிறார்கள். அரசியல் தவிர்ந்த பல விடயங்களையும் இந்த இளைய சமுதாயத்தினர் கலந்துரையாடுவதாகவும் தேவைப்படின் அரசியல் விடயங்களையும் கலந்துரையாடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றித் தெரிவித்த மாலதி மனோகரன் காதல், வீட்டுவேலைகள், மொழி, சமயம், அரசியல் எனப் பல்வேறுபட்ட விடயங்களையும் அங்கு விவாதிப்பதாக அவர் தெரிவித்தார். இக்கூட்டங்களில் தொடர்ந்து கலந்து கொள்ளும் சியாந்தி தவபாலன் (16) கருத்துக் கூறுகையில் தான் தமிழர்கள் அதிகம் இல்லாத பகுதியில் வாழ்வதாகவும் இச்சந்திப்பில் பேசப்படும் விடயங்கள் மிகவும் பயனுள்ளதாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பின் நோக்கம் பற்றிக் குறிப்பிட்ட அவர், புதிய மண்ணுடன் ஒத்துப் போவது, அதனுடன் எம்மை இணைப்பது, எமது அடையாளத்தைப் பேணுவது, எமது கஸ்டங்களைப் பகிர்ந்து ஆதரவாக இருப்பது என்று விளக்கினார். ரொறன்ரோவில் மட்டும் 200,000 பேர் வாழ்கின்றனர். இலங்கைக்கு வெளியே ஈழத் தமிழர்கள் செறிந்து வாழும் நாடாக கனடா உள்ளது. கனடிய இளம் தமிழ் சமூகம் ஐரோப்பியத் தமிழர்களுக்கு பல வழிகளிலும் முன்னுதாரணமாக விளங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**MALIK DOUBLE GLAZING LTD**
Manufacturers, Suppliers & Installers of Double Glazing, UPVC and Aluminium Windows, Doors, Patio Doors & Porches
Trade & Retail Welcome
**020 8459 8811**
www.malikdoubleglazing.co.uk Fax: 020 8459 8844
202 Church Road, Willesden, London NW10 9NP

# தமிழக இயக்குநர் பாரிஸ் தமிழ் கலைஞர்களுடன்

சினிமாக்கலை இரசனை என்ற மையப்பொருளில் அறிவியல் கருத்துப்பட்டறை 27.04.2003 அன்று பாரிசில் சிறப்புற நடைபெற்றது. காட்சியரங்கம், கருத்தரங்கம் என இரண்டு நிகழ்வாக பிரிக்கப்பட்டு நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது. முதல் நிகழ்வான காட்சியரங்கில் அம்சன்குமாரின் மூன்று விபரணப்படங்களும் தமயந்தியின் மழை நீர், பந்து ஆகிய இரண்டு குறும்படங்களும் காண்பிக்கப்பட்டன. இந்நிகழ்வின் சிறப்பு அதிதியாக அம்சன் குமாரும் அவரது துணைவியாரும் கலந்து சிறப்பித்தனர். பிரெஞ்சின் நாடகத் துறையில் இயங்கி வரும் அக்லி அலாப் அவர்களும் கலந்து கொண்டு தனது கருத்துக்களை தெரிவித்தார். இந்நிகழ்வை அப்பால் தமிழ் நிர்வாகிகளில் ஒருவரான திரு முகுந்தன் அவர்கள் தொகுத்து சிறப்புற வழங்கினார்.

தமயந்தியின் மழை நீர் குறும் திரைப்படம் பற்றிய கருத்தை அம்சன் குமார் வழங்குகையில் மழை நீர் நிலத்தில் வீழ்ந்து விழலுக்கு இறைத்த நீர் போவது போல வெளிநாடுகளில் இருந்து மாடாய் அடிச்சு கொடுக்கும் பணத்தில் பெற்றோர் ஆடம்பரச் செலவுகளை செய்வது குறித்து பேசுகிறது என்றார்.

**KUDOS CONTRACT FURNITURE**
Quality furniture to suit your budget
**Single Bed** From **£49.95**
**Double Bed** From **£79.95**
BARGAIN PRICES
Call us on
020 8893 6192
07887720960
357, Uxbridge Road, Southall

# "உப்பில் உறைந்த உதிரங்கள்"
# போராளிகளின் படைப்பு

ஐரோப்பாவிற்கு கலை பயணம் மேற்கொண்டுள்ள ஈழத்து போராளிக் கலைஞர்களின் நிகழ்ச்சி பாரிசில் மே தினத்தன்று நடைபெற்றது. ஒரே நாளில் இரண்டு தடவைகள் நடைபெற்ற இந்த தாயகப் பரணி நிகழ்ச்சியில் ஆறாயிரத்திற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டிருந்தார்கள். இந்த நிகழ்ச்சியில் "உப்பில் உறைந்த உதிரங்கள்" எனும் திரைப்படமும் வெளியிட்டு வைக்கப்பட்டது. அவ்வேளையில் இத்திரைப்படம் கடற்புலிகளின் பெண் போராளி ஒருவரின் வாழ்வை பேசுவதாக அதன் நெறியாளரும் இயக்குனருமான குயிலினி அவர்கள் குறிப்பிட்டார்கள். படப் பிடிப்பின் போது தாம் அடைந்த, தாம் கடந்த துயர்களையும், பாதைகளையும் அவர் குறிப்பிட்டு பேசினார்.


போர் கலையிலே வல்லவர்களான போராளிகள் இசைக் கலையிலும் வல்லவர்கள் என்பதை அன்று அவ்வரங்கில் நிருபித்தார்கள். தாயகக் கலைஞர்களது விடுதலை பாடல்கள் பார்வையாளரிடையே புத்துணர்வையும் எழுச்சியையும் தோற்றுவித்தது.

**QUALITY RIGID KITCHENS**
*Suppy Only or Suppy & Fit*


HEATHROW KITCHENS
140 UXBRIDGE ROAD, HAYES
FAX: 020 8581 1005
020 8813 6952

# ஏஜென்ட் இந்திரனின் தந்திரம்

# சுரண்டிய பணத்தில் சுற்றுலா


© : 4342926 Fax : 044-4346082
MANIMEKALAI PRASURAM PUBLISHERS & BOOK-SELLERS
Post Box No.1447, 4, Thanikachalam Road, T.Nagar, Madras - 600 017. INDIA

SALE OF TAMIL BOOKS TO 5-6-02
LIBRARIES OF LONDON BOROUGH
OF NEWHAM:

| No. | Name of Books | Price in Indian Rs. | No. | Name of Books | Indian Rs. |
| --- | --- | --- | --- | --- | --- |
| 1. | Kamba Ramayanam | Rs 275 | | B/F amount Rs | 890 |
| 28. | Oolai Veedum Nizhal | 26 | 38. | Aarumuga Naavalar | 75 |
| 29. | Malaratham Manima | 35 | 39. | Tanipaaraigalum | 40 |
| | B/F. | 1717 | | Total Rs | 2017 |
| | | | | Rs 2017 ÷ 10 = 200£ pounds | |

மணிமேகலைப் பிரசுரத்தின் இலண்டன் முகவர் இந்திரகுமார் என்பவர் நியூகாம் நூலகங்களுக்கு 39 நூல்கள் £200 க்கு வழங்கி இருக்கிறார். ஆனால் தனது விடுதலை என்ற பத்திரிகையில் மறைந்திருந்து எழுதும் இவர் £1000க்கு கணக்குக் கூறி உள்ளார். மணிமேகலைப் பிரசுர உரிமையாளர் ரவி தமிழ்வாணனுக்கு 39 நூல்களுக்கு £200 என்று கூறிவிட்டு மறுமுனையில் அதே 39 நூல்களுக்கு £1000 கேட்கின்றார் இந்திரகுமார். முகவர் இந்திரகுமாருக்கும் மணிமேகலைப் பிரசுர உரிமையாளர் ரவிதமிழ்வாணனுக்கும் பணக் கொடுக்கல் வாங்கலில் பிரச்சினை ஏற்பட்டது எழுத்தாளர்கள் அறிந்ததே. அதன் வெளிப்பாடாக கடந்த ஆண்டு மணிமேகலைப் பிரசுராலயம் ஏஜன்ட் இந்திரகுமார் மூலம் ஏற்பாடு செய்த வெளியீட்டு விழாவில் இலண்டனில் தங்கியிருந்த தமிழ்வாணன் கலந்து கொள்ளவில்லை.

ஐரோப்பாவில் உள்ள தமிழ் எழுத்தாளர்களிடம் எழுத்தின் மூலப் பிரதியையும் அதனை வெளியிடுவதற்கான பெரும் தொகைப் பணத்தையும் மணிமேகலைப் பிரசுரம் ஏஜன்ட் இந்திரகுமார் மூலம் பெற்று, நூல்களை தரமற்ற முறையில் வெளியிட்டு வருகின்றது என்று தற்போது பரவலாகக் குற்றம்சாட்டப்படுகிறது.

மணிமேகலைப் பிரசுரம் தொடர்பாக ஐபிசி தமிழ் வானொலியின் இலக்கியக் கலசம் பகுதியில் கருத்துக்கள் பரிமாறப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேலும் இப்படியான சுரண்டல்களைத் தவிர்ப்பதற்காக ஜேர்மனியில் எழுத்தாளர் சங்கம் ஒன்றும் உருவாக்கப்பட்டு உள்ளது.

புலம்பெயர்ந்த இலக்கிய ஆர்வலர்களிடம் அவர்களின் நூல்களை வெளியிடுகிறோம் என்று பெருமளவு பணத்தைப் ஏஜென்ட் இந்திரகுமார் மூலமாகப் பெற்றுக் கொள்ளும் மணிமேகலைப் பிரசுரம் தமிழகத்தில் ஏறக்குறைய 1000 நூல்களை அச்சிடுகிறது. தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டில் வெளிவரும் அனைத்து நூல்களினதும் 600 பிரதிகளை தனது நூலகங்களுக்காக கொள்வனவு செய்கின்றது. அப்பணம் நூல்களின் பிரசுரத்திற்குப் போதும். எஞ்சிய நூல்களை அனுப்ப எழுத்தாளர்களிடம் இருந்து மேலும் பணம் கேட்கப்படுகிறது. இங்கு நூல்கள் வந்தடைந்ததும் ஆண்டுக்கு ஒரு தடவை 10க்கும் மேற்பட்ட (ஒரு தடவை 22 நூல்கள் ஜேர்மனியில் வெளியிட்டு வைக்கப்பட்டது.) நூல்கள் ஒரே தடவையில் ஜெட் வேகத்தில் வெளியிடப்படும். இங்கு வெளியீட்டு விழாவில் பெறப்படும் பணமும் இந்திரகுமார் - மணிமேகலைப் பிரசுரத்தின் கூட்டிடம் சென்று விடும். தமது திறமைகைள பேனாவில் வடித்த அந்த எழுத்தாளர்கள் வெறும் கையுடன் சென்று விடுகிறார்கள்.

புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களிடமும் தமிழ்நாட்டு அரசிடமும், நூல் வெளியீட்டின் மூலமும் கொள்ளை இலாபம் சம்பாதிக்கும் இந்த நூல்வெளியீட்டு பம்மாத்தில் பெறும் இலாபத்தில் பங்குபெற்றுக் கொள்ளும் இந்திரகுமார் அப்பணத்தில் தமிழ்நாட்டுக்கு சுற்றுலா செல்வதை வழக்காக்கி இருந்தார். எழுத்தாளரைச் சுரண்டிய பணத்தில் சுற்றுலாச் சென்றவர் தான் தான் ஐரோப்பிய தமிழர்களின் பிரதிநிதி என்றும் ஈழத்தமிழ் இலக்கியத்தில் அக்கறை உடையவர் என்றும் தம்பட்டம் அடிப்பார். ஏஜென்ட் இந்திரகுமார் தமிழர்களுக்கும் தமிழ் எழுத்தாளர்களுக்கும் நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை தயவு செய்து அவர்களுக்கு உபத்திரவம் செய்யாமல் இருக்க முயற்சிக்க வேண்டும் என்கிறார் பெயர் குறிப்பிட விரும்பாத எழுத்தாளர்.

ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக வாதாடுவதாகச் சேர்த்த பணம் சம்பந்தப்பட்ட சட்டத்தரணிகளுக்கு வழங்கப்படவில்லை என அச்சட்டத்தரணிகள் பத்திரிகைக்குப் பேட்டி அளித்த உள்ளனர் அதிலும் இந்திரகுமார் சம்பந்தப்பட்டு உள்ளதாகக் குற்றம்சாட்டப்படுகிறது. தற்போது வைகோ, நெடுமாறன் கைது செய்யப்பட்ட மறுதினமே அவர்களை விடுவிக்க சிலரிடம் இந்திரகுமார் பணம் கேட்டு உள்ளார் என உதயனுக்குத் தெரியவருகிறது. தனது மோசடிகளை மறைக்க மற்றுமோர் மோசடிப் பேர்வழியுடன் சேர்ந்து விடுதலை என்ற மொட்டைப் பத்திரிகைக்கு தலைமறைவு ஆசிரியராக இந்திரகுமார் உள்ளார். இந்திரகுமார் எழுத்தாளர்களிடமும் நன்கொடையாளர்களிடமும் பெற்ற பணத்தை அவர்களுக்கே திருப்பிக் கொடுத்து பொது மன்னிப்புக் கேட்க வேண்டும் என பாதிக்கப்பட் எழுத்தாளர்கள் உதயனுக்கத் தெரிவிக்கின்றனர். பணத்தைப் பெற்றவர் அந்த நூல்களைத் தரமாகக் கூட வெளியிடவில்லையாம். எழுத்துப் பிழைகளுடனும் ஒழுங்கற்ற வடிவமைப்புடனும் தரமற்ற நூலாகவே அவை வெளிவருகின்றனவாம். தற்போது தான் தப்பிப்பதற்காக அவர் முழுப் பழியையும் ரவி தமிழ்வாணன் மீது போடுகிறாராம். இலாபத்தை பங்கு போடும் இந்திரகுமார் பழியை ரவிக்கு விட்டுவிட்டாராம்.

# அன்றைய கலவரத்திற்கு இன்று நட்ட ஈடு

1921ல் அமெரிக்காவின் ருல்சா பகுதியில் இடம்பெற்ற கலவரத்தில் தப்பித்த 120க்கும் மேற்பட்டவர்கள் நட்ட ஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்து உள்ளனர். அமெரிக்க வரலாற்றில் இடம்பெற்ற மிகமோசமான இனக்கலவரமாகக் கருதப்படும் இக்கலவரத்தில் 38 பேரே கொல்லப்பட்டதாக அரச பதிவுகள் தெரிவிக்கிறது. ஆனால் இதில் கொல்லப்பட்டவர்கள் நூற்றுக் கணக்கானவர்கள் என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். கலவரத்தின் போது 6 வயதாக இருந்த ஜக்சன் என்பவர், தான் குன்று ஒன்றில் இருந்து பார்த்த போது லொறிக் கணக்கான உடல்களைக் கண்டதாகக் குறிப்பிட்டார்.

வெள்ளையினப் பெண்ணை பாலியல் பாலாத்காரம் செய்ததாகக் குற்றம் சாட்டி கறுப்பின இளைஞனை வெள்ளையர்கள் சட்டத்திற்குப் புறம்பாக விசாரித்ததை கறுப்பின சமூகம் தடுத்ததை அடுத்து கலவரம் வெடித்தது. இதனை வைத்து ஹொலிவூட் திரைப்படம் ஒன்றும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

1983இலும் அதற்குப் பின்னும் இலங்கைத் தீவில் இடம்பெற்ற வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் அந்தக் கொடுமைகளை இழைத்தவர்களுக்கு எதிராக சட்ட நடிவடிக்கை எடுத்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# புலம்பெயர்வும் இனக்கலப்பும்



பிரித்தானியாவுக்கு புலம்பெயர்பவர்கள் ஒன்றிணைவுக்கும் தனித்துவத்திற்கும் இடையே இழுபட்டு வந்த நிலை அண்மைக் காலமாக மாறி உள்ளதாக பிபிசி 4 முன்னிலையாளர் ஜோர்ஜ் அழகையா கார்டியன் பத்திரிகையில் எழுதி உள்ளார். அவர் தனது கட்டுரையில் அண்மைக்காலமாக புலம்பெயர்பவர்கள் தனித்துவத்தின் பக்கம் இழுக்கப்பட்டு உள்ளதாகக் குறிப்பிட்டு உள்ளார். பல்லினத்துவம் என்பது புலம்பெயர்பவர்கள் எவ்வளவு மாறுபட்டவர்களாக தாங்கள் இருக்க முடியுமோ அவ்வளவு மாறுபாட்டுடன் வாழ அனுமதிக்கிறது என்கிறார் அழகையா. இதில் மற்றைய மக்களுடன் கலப்பதற்கு எந்த வசதியும் செய்யப்படாதது ஒரு பிரச்சினை என அவர் தனது கட்டுரையில் குறிப்பிட்டு உள்ளார்.

மதப் பள்ளிகள் பிரச்சினைக்குத் தீர்வு இல்லை என்றும் கறுப்பர்களும் ஆசியர்களும் புறநகர்ப் பகுதிகளில் ஒதுக்கப்படுவதாகவும் அக்கட்டுரை தெரிவிக்கிறது. மேலும் புறநகர்ப் பகுதிகளில் இருந்து வளரும் சிறார்கள் பிரதான சமூகத்தில் இருந்து விலகி இருப்பதாகக் குறிப்பிடும் அக்கட்டுரை அச்சிறார்கள் அப்பிரதான சமூகத்தினூடாகவே தமது வழியை அமைக்க வேண்டி உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். மற்றையவர்களுடைய தனித்துவங்களை மதித்து வாழ்வதுடன் நின்றுவிடாமல் மற்றைய இனங்களுடன் கலந்து வாழ ஊக்குவிக்கப்பட வேண்டும் என அழகையா தனது கட்டுரையின் முடிவில் குறிப்பிட்டு உள்ளார். பிரித்தானியாவைத் தமது தாயகமாக ஏற்றுக் கொண்டவர்கள் ஒரு கேள்வியை தமக்குள் கேட்க வேண்டும் என்று கேட்டுள்ள கட்டுரையாளர்; புலம்பெயர்வு என்பது முன்பு என்ன செய்தோமோ அதனை அப்படியே ஆனால் புதிய நாட்டில் செய்வதா? என்ற கேள்வியை வாசகர்களுக்கு விட்டுள்ளார்.

# இந்திய உணவகம்

# ஆசியர்களுக்கு கதவடைப்பு

கம்பிரியா பகுதியில் உள்ள 'Emperor of India' உணவகம் ஆசியர்களுக்கு கதவடைப்புச் செய்துள்ளது. ஏப்ரல் இறுதிப் பகுதியில் அவ்வுணவகத்திற்குச் சென்ற வயதான தம்பதிகளுக்கு இருக்கைகள் காலியாக இருப்பது தெளிவாகத் தெரியக் கூடியதாக இருந்தும்; இருக்கைகள் யாவும் பதிவு செய்யப்பட்டு விட்டதாகக் கூறப்பட்டது. அது பற்றி அருகில் விசாரித்த போது அவ்வுணவகத்தினர் ஆசியர்களை தடை செய்துள்ளமை தெரியவந்தது. இது பற்றி இன சமத்துவத்திற்கான ஆணைக்குழுவிற்கு புகார் செய்யப்பட்டு உள்ளது.

தாங்கள் ஆசியர்களை இன அடிப்படையில் தடை செய்யவில்லை என்று குறிப்பிட்ட பங்களாதேஷ் உரிமையாளர் ஆசியர்கள் உணவுக்கு காரம் போதாது என்பார்கள் ஆனால் வெள்ளையர்களும் பிரித்தானியர்களும் காரத்தை விரும்பமாட்டார்கள் என்று குறிப்பிட்டார்.

# கிளயர் சோட் பதவி விலகினார்

அமைச்சரவையில் வெளிப்படையாகப் பேசுபவரும் இடதுசாரிப் போக்குடையவருமான சர்வதேச அபிவிருத்திக்கான செயலாளர் கிளயர் சோட் மே நடுப்பகுதியில் பதவி விலகினார். பிரதமர் ரொனி பிளேயர் மீது கடுமையான விமர்சனத்தை வைத்துள்ள சோட், போருக்குப் பிந்திய ஈராக்கில் ஐ நா வின் நிலை தொடர்பாக பிரதமர் தனக்கு அளித்த வாக்குறுதியைக் காப்பாற்றத் தவறியுள்ளதாகக் குறிப்பிட்டு உள்ளார். மூன்றாவது தேர்தலிலும் பிரதமர் போட்டியிட்டால் அது வேதனையானது எனக் குறிப்பிட்ட சோட் பிளேயர் கோடன் பிறவுணுக்கு வழிவிட வேண்டும் என்றும் கோரி உள்ளார்.

சோட்டின் இடத்துக்கு அமோஸ் என்ற கறுப்பினப் பெண்மணி நியமிக்கப்பட்டு உள்ளார். கறுப்பினப் பெண் ஒருவர் அமைச்சரவையில் இடம்பெறுவது இதுவே முதற்தடவை. கிளயர் சோட் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொண்ட முக்கிய அமைச்சர். சமாதானத்துக்கும் உதவிக்கும் முடிச்சுப் போட வேண்டும் என்பதில் தீவிரமாக இவர் செயற்பட்டிருந்தார். சர்ச்சைக்குரிய ஆப்கானிஸ்தான் யுத்தத்தின் போதும் அந்நாட்டுக்கான உணவு விநியோகத்தை கண்காணிக்க நேரடியாக கிளயர் சோட் ஆப்கானிஸ்தான் சென்றிருந்தார்.

## பொங்கும் பொழுது

பொங்கும் பொழுது கலாச்சார நிகழ்ச்சி யூலை 5ம் திகதி வெம்பிளி உயர் பள்ளியில் இடம்பெற உள்ளது. இரண்டாவது ஆண்டாக நடைபெறும் இந்நிகழ்ச்சி மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் அமைப்பினால் அக்கல்லூரி மேம்பாட்டுக்கான நிதி திரட்டுவதற்காக நடத்தப்படுகிறது. இந்நிகழ்ச்சி கனடாவில் பல ஆண்டுகளாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

For News & Advertising: 020 8952 5677 For Distributions : 020 8905 7775

## அமெரிக்காவை வெளியேறக் கோரிக்கை

ஈராக்கை விடுவிக்க வந்ததாக கூறிக் கொள்ளும் அமெரிக்க இராணுவத்தை வெளியேறும் படி அங்கு வாழும் பெரும்பான்மை மக்களான சியா சமூகத்தினர் கோரி உள்ளனர். சதாமின் சர்வாதிகார ஆட்சியின் போது ஈரானில் அடைக்கலம் புகுந்திருந்த மொகமட் பார்கர் அல் ஹக்கீம் (66) என்ற ஆன்மீகத் தலைவர் தற்போது ஈராக்கிற்கு திரும்பி உள்ளார். 23 ஆண்டுகளுக்குப் பின் நாடு திரும்பிய தமது ஆன்மீகத் தலைவரை வரவேற்க புனித நகரான நஜப்பில் ஆயிரக்கணக்கில் மக்கள் கூடினர்.

ஈராக்கின் இஸ்லாமியப் புரட்சிக்கான அதி உயர் சபையின் தலைவரான பார்க்கர் அல் ஹக்கீம் ஈராக்கில் உள்ள சியா, சுன்னி, குர்திஸ் மற்றும் இன மக்களை ஆள்வதற்கான ஜனநாயக ஆட்சியைத் தெரிவு செய்யும் படி மக்களைக் கேட்டுள்ளதுடன் அமெரிக்க இராணுவத்தை வெளியேறும் படியும் கோரி உள்ளார்.

மேலும் ஏப்ரல் 29 அன்று சதாமின் உருவப்படத்தைத் தாங்கிக் கொண்டு கோஷமிட்டுக் கொண்டு வந்த 200க்கும் மேற்பட்ட நிராயுதபாணிகளான போராட்டக்காரர்கள் மீது அமெரிக்க இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 13 பேர் கொல்லப்பட்டனர். 70 பேர் காயமடைந்தனர். கொல்லப்பட்டவர்களில் மூவர் 11 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள்.

## அகதிகளை கப்பலில் அடைக்க ரோறி திட்டம்

போலித் தஞ்ச விண்ணப்பங்களைத் தடுப்பதற்காக அகதிகளை கப்பலில் அல்லது தீவுகளில் தடுத்து வைக்கப் போவதாக எதிர்க் கட்சித் தலைவர் இயன் டங்கன் சிமித் தெரிவித்து உள்ளார். உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்று ஒரு வாரத்தில் அவர் இக்கருத்தை வெளியிட்டு உள்ளார். உண்மையான அகதிகள் இந்தத் தஞ்ச வரிசையில் பின் தள்ளப்படுவதைத் தவிர்க்க இந்த அதிரடி நடவடிக்கை வேண்டும் என தனது கருத்தை டங்கன் சிமித் நியாயப்படுத்தினார்.

ஐரோப்பிய ஒன்றியத்துடன் உடன்பட்டு பிரித்தானியா இத்தனை அகதிகளுக்கு மட்டும் தான் தஞ்சம் வழங்க வேண்டும் என்றும் ஏனையவர்கள் தங்கள் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டும் அல்லது சரக்குக் கப்பல்களை மாற்றி அவற்றில் தங்க வைக்கப்பட வேண்டும் என்றும் டங்கன் சிமித் தெரிவிக்கிறார்.

## கையைக் கட்டி அனுப்பப்பட்டனர்

பலவந்தமாக அப்கானிஸ்தானுக்கு அனுப்பப்பட்டவர்கள் கைகள் கட்டப்பட்டு விமானம் ஏற்றப்பட்டதாக தெரியவந்து உள்ளது. டேவிட் பிளங்கற்றின் பலவந்தமாகத் திருப்பி அனுப்பும் திட்டத்தின் ஒரு கட்டமாக தஞ்சம் நிராகரிக்கப்பட்ட 21 ஆப்கானிஸ்தானியர்கள் விசேட விமானம் ஒன்றில் கட்விக்கில் இருந்து ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பப்பட்டனர். ஆனால் இச்செய்தியை மறுத்த உள்துறை அமைச்சு கலகம் விளைவித்த இருவர் மட்டுமே கைவிலங்கிடப்பட்டதாகத் தெரிவிக்கின்றது. பலவந்தமாக திருப்பி அனுப்ப £120,000 செலவிடப்பட்டு உள்ளது.

## ஆசிய ஊடகவியலாளர்கள் பற்றாக்குறை

பிரித்தானிய பிரதான ஊடகங்களில் ஆசியர்களின் பற்றாக்குறை உணரப்படுகிறது. ஸ்கில்செற் என்ற ஊடக அமைப்பு ஒன்று மேற்கொண்ட புள்ளி விபரத்திலேயே ஏனைய சிறுபான்மையினரைக் காட்டிலும் ஆசியர்கள் ஊடகத் துறையில் மிகவும் பின்தங்கி உள்ளமை தெரியவந்து உள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு ஊடகத்துறையில் ஆசியர்களின் திறமையை ஊக்கப்படுத்தும் திட்டம், பிரித்தானியாவில் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. இதனை Asians In Media என்ற அமைப்பு மேற்கொண்டு உள்ளது.

தமிழர்கள் டாக்டர், இன்ஜினியர், எக்கவுண்டன் என்ற குறிப்பிட்ட சில துறைகளுக்குள்ளேயே தம்மை முடக்கிக் கொள்வது மாற்றப்பட வேண்டும் என்ற எண்ணம் தற்போது தோன்றி உள்ளது. ஜேம்ஸ் குமாரசாமி, ஜோர்ஜ் அழகையா, கிருஷ்ணன் குருமூர்த்தி போன்றவர்கள் பிரதான ஊடகங்களில் தமக்கென ஒரு இடத்தைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அண்மைக் காலத்தில் யாரும் இத்துறையில் புதிதாக தோன்றவில்லை.

## மிடில்செக்ஸ் பல்கலைக் கழகம் மகாராணியின் அங்கீகாரம்

இங்கிலாந்தில் அதிகூடிய வெளிநாட்டு மாணவர்களைக் கொண்ட பல்கலைக்கழகமான மிடில்செக்ஸ் பல்கலைக் கழகத்திற்கு மகாராணியின் வர்த்தக விருது வழங்கப்பட்டு உள்ளது. இவ்வாண்டு 123 பிரித்தானிய நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு சர்வதேச வர்த்தகத்தில் அவற்றிற்கு விருது வழங்க சிபார்சு செய்யப்பட்டது.

25,000 மாணவர் தொகையைக் கொண்ட இப்பல்கலைக் கழகத்தில் 20 வீதமானவர்கள் வெளிநாட்டு மாணவர்கள். இதில் 1,048 ஐரோப்பிய மாணவர்களும் ஏனைய 134 நாடுகளில் இருந்து 4,590 மாணவர்களும் கல்வி பயில்கின்றனர். கடந்த 3 ஆண்டுகளில் ஆசிய மாணவர்களின் எண்ணிக்கை 80 வீதத்தால் உயர்ந்து உள்ளது. இப்பல்கலைக் கழகம் பல தமிழ்ப் பட்டதாரிகளையும் உருவாக்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## அடுத்த பொதுத் தேர்தலுக்கு நாடி பிடிப்பு

### உள்ளாட்சி தேர்தலில் தொழிற்கட்சிக்கு சவுக்கடி

மே 1ல் பிரித்தானியாவில் லண்டன் மாநகர பகுதி தவிர்ந்த மற்றைய மாநகர, நகர சபைகளுக்கான தேர்தலில் தொழிற்கட்சி 29 உள்ளாட்சி மன்றங்களை இழந்து உள்ளது. இந்த தேர்தலில் 30% மக்களே வாக்களித்திருந்தனர். இத்தேர்தலானது ஈராக் யுத்தத்தின் பின் ஆளும் தொழிற் கட்சிக்குள்ள ஆதரவின் அளவுகோலாக அமையுமென அரசியல் அவதானிகள் எதிர்பார்த்தனர். இந்நிலையில் தேர்தல் முடிவுகளின்படி ஆளும் தொழிற்கட்சி 29 உள்ளாட்சி மன்றங்களை இழந்து உள்ளது. வலதுசாரிக் கட்சியான ரோறி 30 புதிய உள்ளாட்சி மன்றங்களை வென்று உள்ளது. 12 ஆண்டுகளுக்குப் பின் இக்கட்சி உள்ளாட்சி மன்றங்களில் தன்னை நிலைநிறுத்தி உள்ளது. இது தமக்குக் கிடைத்த வெற்றி என வலதுசாரி கட்சியினர் கூறியிருந்தாலும் இந்த முடிவுகளின் பின்னணி பெரும் கேள்விகளையே எழுப்பியுள்ளது.

சிறுபான்மைச் சமூகமான முஸ்லீம்கள் இத்தேர்தலை பகிஸ்கரித்திருந்தது குறிப்பிடத்தக்கது. இதனால் பெருவாரியாக முஸ்லீம்கள் வாழும் பகுதியான பேர்மிங்காம் பகுதியில் 20 வருடங்களாக பெரும்பான்மை பிரதிநிதித்துவ பலத்துடன் விளங்கிய தொழிற்கட்சி இம்முறை அம்மாநகர சபையை இழந்தது. அத்துடன் முஸ்லீம்கள் மற்றும் சிறுபான்மை இனத்தவரின் ஆதரவின்மையாலும், ஈராக் யுத்தம் தொடர்பான உட்கட்சி பாகுபாட்டாலும் 550க்கும் மேற்பட்ட பிரதிநிதித்துவங்களை தொழிற்கட்சி இழந்து உள்ளது. இதனை ஈராக் மீதான யுத்தத்தின் கணிப்பாக ஏற்க தொழிற்கட்சி மறுத்து வருகின்றது. இடைக்காலத் தேர்தலில் ஆளும்கட்சி எப்போதும் பின்னடைவைச் சந்திப்பது வழமை எனத் தொழிற்கட்சியினர் சமாதானம் சொல்கின்றனர்.

இத்தேர்தலின் முக்கிய அம்சம் B.N.P என்ற பிரித்தானிய தீவிர வலதுசாரி கட்சி பேர்ன்லி என்ற பகுதியில் இரண்டாவது அதிகபடியான உறுப்பினர்களை கொண்ட கட்சியாக தெரிவாகியுள்ளமை. இம்முறை பிரித்தானியா முழுவதுமாக மொத்தம் 16 நகரசபை ஆசனங்களை B.N.P கைப்பற்றியுள்ளது. இது இங்குள்ள அரசியல் வாதிகள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளதுடன் B.N.P கட்சி வளர்ந்து வருவதையும் இம்முறை அதில் பெண் பிரதிநிதிகள் தெரிவாகியுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. அத்துடன் சிறுபான்மையினருக்கும் பாதுகாப்பின்மை அதிகரித்து வருகிறது.

இந்நிலையை கட்டுப்படுத்த இங்குள்ள அரசியல் கட்சிகள் என்ன செய்ய போகின்றன என்ற கேள்வி எழுந்துள்ளது. ஏனெனில் Britain, France, Holland போன்ற கொலணித்துவ ஆட்சியாளர்கள் மற்றைய ஐரோப்பிய நாடுகள் போலல்லாது இவ்விடயத்தில் சில வரலாற்றுக் கடமைகளை கொண்டுள்ளன என்பது மறுக்க முடியாததாகும். இப்படிப்பட்ட நாடுகளில் தீவிர வலதுசாரி அமைப்புகள் மக்கள் மத்தியில் ஜனநாயக ரீதியாக தோற்றம் பெறுவதை கட்டுப்படுத்த எதிர்காலத்தில் இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பது சிறுபான்மைச் சமூகங்களால் மிகவும் ஆர்வத்துடன் நோக்கப்படுகிறது.

## தெரிவுக் குழுவில் ஐஸ்வர்யா ராய்

### ஆங்கிலத்தில் நடித்தால் முத்தமும் ஆடையும் எப்படி?

தமிழ்ப் படவுலகில் நன்கு அறியப்பட்ட கதாநாயகியும் உலக அழகியுமான ஐஸ்வர்யா ராய் Cannes Film Festival படத் தெரிவுக்குழுவில் இடம்பெற்று உள்ளார். இந்தியப் பெண் ஒருவர் தெரிவுக்குழுவுக்கு அழைக்கப்பட்டு இருப்பது இதுவே முதற் தடவையாகும். 20க்கும் மேற்பட்ட படங்களில் நடித்து பல விருதுகளையும் வென்றுள்ள ஐஸ்வர்யா ராய் தெரிவுக் குழுவில் இடம்பெற்றதில் மிகவும் மகிழ்ச்சி அடைவதாகவும் தனக்கு வழங்கப்பட்டு உள்ள பொறுப்பை ஒரு நிமிடத்திற்குக் கூட மறக்க மாட்டேன் என்றும் தெரிவித்து உள்ளார்.

தற்போது பொலிவூட்டில் இருந்து ஹொலிவூட்டிற்கும் அவருக்கு வாய்ப்புகள் எட்டி உள்ளது. ஹொலிவூட்டில் தயாரிக்கப்படும் ஜேம்ஸ் பொண்ட் படத்திற்கு இவர் அழைக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஹமிகவும் சர்வதேச புகழ் பெற்ற இந்திய நட்சத்திரமாக நீங்கள் இருக்கிறீர்கள் அது உங்களுக்கு பதட்டமாக இருக்கிறதா? பெரிய எதிர்பார்ப்பு உங்களை அழுத்துகிறதா?' என பிபிசி நிருபர் கேட்டதற்கு; 'வாய்ப்புகள் வந்துள்ளது. அதனை நான் வெளிப்படுத்தாவிட்டால் அதை அவமதிப்பதாகும். என்னைப் பொறுத்தவரை இவை எல்லாம் சினிமாவின் ஒரு பகுதி. அது ஹிந்தி, பெங்காளி, தமிழ் அல்லது ஆங்கிலமாக இருக்கலாம். என்னைப் பொறுத்தவரை இயக்குநர், கதாபாத்திரம், குழு, சில வேளைகளில் படமும் முக்கியமானது' எனப் பதிலளித்தார்.

'இந்தியப் படங்களில் முத்தமிடாமலும் ஆடை களையாமலும் உங்களை குறிப்பாக சித்தரித்து வருகிறீர்கள். ஆங்கிலப் படத்தில் நடிக்கும் போது தொடர்ந்தும் அப்படியே நடிப்பீர்களா?' என்று நிருபர் கேட்டதற்கு, 'நான் எதைச் செய்தாலும் குறிப்பாகச் செய்கின்றேன். ஆனால் இப்படித் தான் என்று என்னை ஒரு வழி மூலம் அடையாளப்படுத்த நான் விரும்பவில்லை. நான் மாற விரும்புகிறேன். நான் என்ன செய்வேன் என்ன செய்ய மாட்டேன் என்பது கதையமைப்பில் தங்கி உள்ளது. கதையமைப்பு, கதாபாத்திரம், இயக்குநர் இவை எல்லாம் அதனைத் தேவை என்றால் எனது வசதிக்கு அமைய அந்த நேரத்தில் அதனைச் செயற்படுத்துவேன்' எனத் தெரிவித்தார்.

## குடும்பத்தைக் சீர்குலைத்த மருத்துவர் இன்னும் பல லீலைகள் அம்பலம்

எசெக்ஸ் பகுதியில் குடும்ப மருத்துவராகப் பணியாற்றிய கோபால" (55) என்ற குடும்ப மருத்துவர் தன்னிடம் சிகிச்சை பெற வந்த இளம் பெண்ணுடன் தகாத முறையில் உறவை வளர்த்தது பற்றி கடந்த இதழில் செய்தி வந்தது தெரிந்ததே. லேய்டன்ஸ்ரோன் பகுதியில் தற்போது வதியும் மேற்படி மருத்துவர் இவ்வாறான தகாத உறவுகளில் ஏற்கனவே ஈடுபட்டு வந்து உள்ளார் என்பதும் தற்போது தெரியவந்து உள்ளது.

இலங்கையில் 10 ஆண்டுகள் தஹனி என்ற பெண்ணை இவர் காதலித்துக் கொண்டிருந்த வேளையில் இவர் ஒரு விபச்சாரியுடன் காணப்பட்டதால் இவருடைய காதல் உறவு முறிந்தது. அதன் பின்னர் வஹதி என்ற பெண்ணை கொழுத்த சீதனத்துடன் திருமணம் செய்து கொண்டார். இந்த உறவும் நீடிக்கவில்லை. அப்பெண் எரிபொருள் நிலையத்தில் வேலை செய்த ஒருவருடன் உறவு கொண்டு அவருடன் சென்று விட்டார். இதனை அடுத்து இவர் □தி என்ற பெண்ணைத் திருமணம் செய்து வாழ்ந்து வந்தார். அப்பெண்ணும் ஒரு குடும்ப மருத்துவர் என்பது குறிப்பிடத்தக்கது. அச்சமயத்திலேயே இவர் தன்னிடம் சிகிச்சைக்கு வந்த பெண்ணுடன் தகாத உறவை வளர்த்து உள்ளார்.

நம்பிக்கையை மையமாகக் கொண்ட மருத்துவத் தொழிலில் உள்ள மேற்படி மருத்துவர் தன்னிடம் சிகிச்சைக்கு வந்தவருடன் தகாத உறவை வளர்த்தது அவரது தொழிலின் கண்ணியத்திற்கு மிகவும் கேவலமான செயற்பாடு எனத் தெரிவித்த பாதிக்கப்பட்டவரின் நெருங்கிய உறவினர் இப்படியான மருத்துவர்கள் தொழில் செய்ய அனுமதிக்கப்படக் கூடாது எனத் தெரிவித்தார். இப்படியானவர்கள் சட்டத்தில் இருந்து தப்பிக்க முடிந்தாலும் சமூகத்தின் முன் அம்பலப்படுத்தப்பட வேண்டும் என உதயனுக்குத் தெரிவித்தார்.

For News & Advertising: 020 8952 5677

# UNBEATABLE PRICES

*** TILES * MARBLE * GRANITE * KITCHENS * BATHROOM * WOODFLOORING * FURNITURE**

M A S S I V E S A L E




M A S S I V E S A L E

# ELITE

ELITE TILES are undeniably UK's No.1
Importers, Distributors, Wholesalers and Retailers
of




*Specialists in Granite Worktops and Marble Vanity Tops to order*




## £2 MILLION POUNDS OF AVAILABLE STOCK TO CLEAR

**(collect same day)**

Web Site: www.elite-tiles.co.uk

**020 8202 1806 (12 lines)**
**020 8202 8608 (Fax)**
**Elite House, The Broadway,**
**West Hendon, London, NW9 7BP**

Open Mon-Fri 8.30am-6pm – Sat 10am-5pm – Sun 10am – 2pm

# அகதிகளைத் தடுத்து வைக்கும் காலத்தை பிரான்ஸ் அதிகரிக்க உள்ளது

பிரான்சுக்குள் அகதிகளாக வருபவர்கள் 12 நாட்கள் மட்டுமே தடுத்து வைக்கப்படும் காலத்தை 32 நாட்களாக நீடிப்பது குறித்த புதிய சட்ட மூலத்தை உள்நாட்டமைச்சர் சார்கோசி அறிமுகப்படுத்த உள்ளார். தற்போது இந்த திட்டம் பிரெஞ்சு அமைச்சரவையால் ஆலோசனைக்கும் விவாதத்திற்கும் எடுக்கப்பட்டிருக்கிறது. முடிந்தால் 60 நாட்கள் வரையிலும் தடுத்து வைத்திருக்க உள்நாட்டமைச்சர் நினைக்கிறார்.

ஐரோப்பிய நாடுகளில் இவ்வாறான தடுப்பு சட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றது, பிரான்சும் ஐரோப்பிய நாடுகளுக்கு இணையாக இவ்வகையான சட்ட மூலத்தை கொண்டு வர கட்டாயப்படுத்தப்படுகிறது என்கிறார் சார்கோசி. ஒல்லாந்தில் 1 மாத காலமும், இத்தாலி, அயர்லாந்து, ஒஸ்திரியா, போர்த்துக்கல் ஆகிய நாடுகளில் 2 மாத காலங்களும் தடுத்து வைக்கப்படுகிறார்கள். பெல்ஜியம் நாட்டில் 5 மாத காலங்களும், ஜேர்மனியில் 18 மாத காலங்களும், பிரித்தானியாவில் கால வரையறையற்றும் தடுத்து வைக்கப்படுவதாக சார்கோசி சுட்டிக்காட்டுகிறார்.

ஐரோப்பாவில் வெளிநாட்டவர்களது வருகை பெரிய பிரச்சினையாக வளர்ந்து வருவதாக மிகைப்படுத்தப்பட்டு கூறுப்படுகின்றது. இது நாட்டினது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவும், சுமையானதாகவும் இருப்பதாகவும் வலதுசாரிக் கட்சிகள் பிரச்சாரம் செய்கின்றன. இதனால் இவ்வாறான கடும் சட்டங்கள் பற்றி ஒவ்வொரு நாடும் ஆராய்ந்து வருகிறது.

பிரான்சிற்குள் ஒவ்வொரு ஆண்டும் 20,000 இலிருந்து 30,000 ஆயிரம் வரையிலான அகதிகள் நுழைவதாக சுட்டிக்காட்டுகிறார்கள். இத்தனை பேரையும் ஒவ்வொரு ஆண்டும் தம்மால் அவர்களின் எல்லைக்கு கொண்டு போய் விட்டால் தான் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர முடியும் என 29.04.2003 உள்நாட்டமைச்சர் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார். விசேட விமானங்கள் மூலம் கூட்டாக அகதிகளை திருப்பி அனுப்புவதையே தொடரவும் அவர் விரும்புகிறார். இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்து 5 மாதங்களுக்குள் 7000 வெளிநாட்டவர்கள் திருப்பி அனுப்பப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த புதிய சட்ட மூலம் குறித்து மனித உரிமை அமைப்புக்கள் கவலை தெரிவித்திருக்கின்றன. "ஆரம்ப காலங்களில் தடுத்து வைக்கப்படும் நாட்கள் 3 இலிருந்து 5 நாட்களாக இருந்திருக்கிறது. இன்று 12 இலிருந்து 32 நாட்கள் என்பது நீண்ட காலம்" என La Cimade அமைப்பு தடுத்து வைக்கப்படும் கால நீட்சி குறித்து தனது கருத்தை தெரிவித்திருக்கிறது.

'நீண்ட நாட்கள் தடுத்து வைக்கப்படுவதினால் அகதிகள் மிகுந்த துன்பத்திற்குள்ளாக நேரிடுகிறது. அவர்கள் தடுத்து வைக்கப்படும் இடத்தில் முகம் கழுவுவதற்கோ வசதி இருக்காது, வெளிச்சம் இருக்காது, தரையில் படுக்க வேண்டும்' என்கிறார் சிமாட் உதவி நிறுவனத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரி. இந்த மாதக் கடைசியில் நான்கு குழந்தைகளோடு ஒரு குடும்பம் நிலத்தில் கிடந்தார்கள் என்கிறார் அவர். இதை 30 நாள் காலத்திற்கு நினைத்துப் பாருங்கள். இப்படி நிறையச் சட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை அதே வேகத்தில் அழிக்கப்பட்டிருக்கின்றன. இந்த சட்டம் பொலிசாருக்குள்ளும் தடுத்து வைக்கப்படுபவர்களுக்குள்ளும் ஒரு மோதல் உணர்வை உருவாக்கி வைக்க முயலும். மேலும் இது நல்ல சட்டம் அல்ல எனவும் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

* * * *

# சிறுவர் இலக்கியங்கள் அவசியம்

"எங்கள் மொழியில் சிறுவர் இலக்கியங்கள் அதிகம் இல்லை. ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும் போது மிக மிகக் குறைவு." என்கிறார் யாழ் பொது நூலகத்தின் சர்வதேச இணைப்பாளர் செல்வராஜா. அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில் "எமது சிறுவர்கள் தொடர்ந்து பல விடயங்களையும் அரசியல் நிகழ்வுகள், வரலாற்று உண்மைகள், கதைகள், கட்டுரைகள் போன்றனவற்றை அறிவதில் சிறுவர் இலக்கியங்கள் பெரும்பங்கு வகிக்கலாம்" எனத் தெரிவித்தார்.

ஜேர்மனில் ஏப்ரல் 19ல் நடைபெற்ற இலக்கியச் சந்திப்பில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட செல்வராஜா சிறுவர் இலக்கியம் பற்றிய தனது ஆதங்கத்தை அங்கு வெளிப்படுத்தினார். 1,000 நூல்கள் பதிவு செய்யப்பட்ட நூல்த் தேட்டம் தொகுதி ஒன்றில் 35 சிறுவர் நூல்கள் மட்டுமே காணப்படுவது தமிழில் சிறுவர் இலக்கியத்தின் வறுமையை சுட்டிக் காட்டுகிறது.

பிரா் சிறுவர் தமிழ் கல்வி வளர்ச்சிக்கு உதவும் பொருட்டு எழுத்தாளர்கள் சிறுவர் இலக்கியங்களை உருவாக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். எமது எழுத்தாளர்கள் சிறுவர்களின் எதிர்காலத்தில் அக்கறை உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்றும் இவ்வாறான முயற்சிகள் மூலம் புலம் பெயர்ந்து வாழும் நமது சிறுவர்களின் தமிழ் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தி தமிழ் மொழி வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்க முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

Unique Jewellers
Dealers in
22Ct Gold Jewellery, Diamond and White Gold always in Stock.
020-8606 9768
020-8574 3636
79 Western Road, Southall, Middx. UB2 5HQ
London

16 Minerva Road
Park Royal
London NW10 6HJ UK
Shiv Souvenirs Ltd
Importers and Wholesale Distributors
Fancy Goods TOYS
gifts Souvenirs
and many more
Tel: 020 8963 0512/3
Fax: 020 8963 0518
Email:shivsouvenirs@aol.com

BEST TRADE CENTRE
Need a Car ?
Can't get finance ?
WE CAN HELP
No Deposit - Drive away
TODAY in
one of our great cars
NO Application Refused
CALL
020 8514 0988
763 Romford Road, Manor Park E12
Email: info@besttradecentre.co.uk




Quality Floor at Competitive Price at
Hardwood & Laminate Flooring Centre
306 Honeypot Lane
Stanmore
020 8204 2333

இந்து தகவல் ஏடு
இரண்டாம் வெளியீடு 2003
மிக அதிக புதிய விளக்கங்களுடன்
விரைவில் வெளிவருகிறது




கண்ணியமான நல்ல நோக்குடன் வெளிவரும் இந்த இந்து சமய தகவல் ஏட்டினை ஒவ்வொருவரும் விரைந்து சென்று பெற்றிடுவீர்
இலவசம்
இலவசம்
இலவசம்

நாளொன்றிற்கு £25 வீதம்
மாதம் 6 நாட்கள் வரை
நிரந்தரமாக வேலை
வேண்டுமா?
020 8952 5677

Hall Hire



திருமணம், பிறந்தநாள் வைபவங்கள், மீட்டிங்குகள், கலை-கலாச்சார நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், மற்றும் இதர வைபவங்களுக்கு பாக்ஸ் ஒபீஸ், 200க்கும் மேற்பட்ட இருக்கை வசதி, 350பேருக்குறிய கொள்ளளவு, அன்மையில் புதுப்பிக்கப்பட்டதும், டாய்லட், ஒலிபெருக்கி இயந்திரங்கள், சிறப்பு அதிக ஒளி-விளக்குகள், சீறியல் அலங்கார விளக்குகளுடன் முதல் மாடியில் அமைந்துள்ள அருமையான இந்த ஹாலை புக் செய்ய நாடுங்கள் 020 8905 7775
(விதிமுறை: மாமிச உணவு, மதுபானம் அருந்துதல், உள்ளுக்குள் புகைபிடித்தல் தவிர்க்க வேண்டும்.)



LONDON
BUILDING
SUPPLIES
Tel: 020 8453 0880
Building Materials
Bricks
Blocks
Plaster
Cement
Sand
Aggregates
Concrete



Decorating Materials
Paints
Tools
Ladders
Doors
Windows
Key Cutting
Protective Clothes
Hard Landscaping Display for your IDEAS
அனைவரையும் வரவேற்கின்றோம்
Abbey Road, Park Royal NW10

# தமிழ் மானம் : 'தமிழ் மெகா ஸ்டார் நைட் 2003' முழங்காலுக்கும் உச்சந் தலைக்கும் முடிச்சு

**சிறப்புச் செய்தி**

மே 31ல் நடக்க இருக்கும் 'தமிழ் மெகா 2003' நட்சத்திர இரவு நிகழ்ச்சி தற்போது ஒரு விவாதத்திற்குள் நுழைந்து உள்ளது. இந்த விவாதத்தை பொறுப்புடன் நடத்த யாரும் தயாரில்லை. இதைப் பற்றி விழிப்புணர்வு வந்ததாகக் கூறிக்கொண்டு துண்டுப் பிரசுரம் விட்டவர்களுக்குக் கூட தங்களை அடையாளம் காட்டத் திரணி இருக்கவில்லை. அதற்கு முக்கிய காரணம் பெரும்பாலான மக்கள் இப்பொழுதுபோக்கு நிகழ்ச்சியை ஏற்றுக் கொண்டுள்ளமை தான். கடின உழைப்பாளிகளான புலம்பெயர்ந்த தமிழர்கள் தாம் வாழும் மண்ணில் இருந்து அன்னியப்பட்டே வாழ்கின்றனர். நட்சத்திரங்களும் அவர்கள் காட்டும் கனவுலகமும் தான் அவர்களது இலாபகரமான பொழுது போக்கு. இதனை அரசியல் மயப்படுத்துவதோ மக்களை மந்தைகளாக முத்திரை குத்துவதோ ஏற்கனவே முயற்சிக்கப்பட்டு தோல்வி கண்ட விடயங்கள்.

## எது சரி :

எப்போதும் ஒரு சரியான விடயத்தை செய்பவர்கள், சொல்பவர்கள் அதனை சரியான முறையில் சொல்ல வேண்டும். அப்படிச் செய்ய முடியாதவர்கள் அதைப் பற்றி பேசுவது அர்த்தமற்றது. நட்சத்திர இரவுகளுக்கு எதிரான இந்தப் பிரச்சாரம் இது முதற்தடவை அல்ல. ஏற்கனவே ரஜனிகாந்தின் நிகழ்ச்சி குழப்பப்பட்டது, பிரசாந்த நைற் இரண்டு ஆண்டுகளுக்கு முன் குழப்பப்பட்டது போன்ற சம்பவங்கள் இடம்பெற்றது. இந்த நட்சத்திர இரவுகள் யாவும் பொருளாதார நோக்கில் நடத்தப்படும் பொழுது போக்கு நிகழ்ச்சிகள். இவர்கள் யாரும் சேர்க்கப்படும் பணத்தின் ஒரு பகுதி தமிழகத்தில் உள்ள தமிழ் அகதிகளுக்கோ இலங்கையில் அல்லலுறும் மக்களுக்கோ வழங்கப்படும் என்று பிரச்சாரம் செய்யவில்லை. ரிக்கற் வாங்கி நிகழ்ச்சிக்குச் செல்லும் எல்லோரும் தாங்கள் எதற்கு பணத்தைக் கொடுக்கிறோம் என்பதை அறிந்தே கொடுக்கின்றனர்.

## ஏற்பாட்டாளர்களும் பகிஸ்கரிப்பும் :

மொட்டைப் பிரசுரம் விட்டவர்கள் இந்த நிகழ்ச்சியை கோஸ்டி மோதலை ஏற்படுத்தியோ, வெடிகுண்டுப் புரளியைக் கிளப்பியோ நிகழ்ச்சியைக் குழப்புவது ஒன்றும் கடினமான காரியமல்ல. இந்த ஜனரஞ்சக நிகழ்ச்சி இல்லாவிட்டால் இன்னொரு ஜனரஞ்சக நிகழ்ச்சி. மக்கள் தாங்கள் எதைப் பார்க்க விரும்புகிறார்களோ அதை வேறுவழிகளில் பார்ப்பார்கள்.

இந்தப் பகிஸ்கரிப்பிற்கு எதிராக நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர்களால் விடுக்கப்பட்ட 'நிச்சயமாகப் பகிஸ்கரிப்போம்' என்ற பிரசுரம் சில முக்கிய விடயங்களைச் சுட்டிக்காட்டி உள்ளது. □2003ம் ஆண்டு மே மாதம் 31ம் திகதி நாம் நிகழ்த்தப் போகின்ற நட்சத்திர இரவு நிகழ்ச்சி இலண்டன் மாநகரில் முதன் முதலாக நடைபெறுகின்ற விநோதமான நிகழ்ச்சியும் அல்ல ! முதன் முதலில் நாங்கள் தான் நடத்துகின்ற புத்தம் புதிய நிகழ்ச்சியும் அல்ல□ என தங்கள் துண்டுப் பிரசுரத்தில் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்து உள்ளனர். □நாம் ஒவ்வொருவரும் இனி இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடவேகூடாது என்று சங்கல்ப்பம் பூணும் தருணத்தில்..... □ என்று தொடரும் அப்பிரசுரம் □ஈழத்தமிழர் இல்லங்களில் தென்னிந்திய சினிமாப்படங்களின் ஓடியோ, வீடியோ கசற்றுக்கள் தொடக்கம் எந்தவொரு சாதனங்களும் இனி இருக்கவே மாட்டாது......□ என்கின்ற நிலை உருவாக்கப்படுமா என்ற கேள்வியை எழுப்பி உள்ளனர் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள்.

## யார் மானமுள்ள தமிழர்கள் :

இந்த சினிமாவை விட்டுவிட்டு ஒரு 24 மணிநேர தொலைக்காட்சியையோ, ஒரு வானொலியையோ நடத்திவிட முடியுமா? ஏன் கனவுக் கன்னிகளை முன் பக்கத்திலும் நடுப்பக்கத்திலும் போட்டுத் தான் பத்திரிகை அடிக்க வேண்டும்? பொழுது போக்குத் தமிழ்ப் படம் பார்க்காத ஒரு புலம்பெயர்ந்த தமிழன் இருக்க முடியுமா? 'மானமுள்ள தமிழர்கள் நாம் என்பதை நிருபிப்போம்' என்ற இந்த மொட்டைப் பிரசுரத்தை வெளியிட்டவர்கள் அவர்கள் கூறும் ஒரு மானமுள்ள தமிழனை உதயன் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கவும். அப்படி ஒருவரைச் சந்திக்க நாங்கள் மிகவும் ஆர்வமாக உள்ளோம். இதை வெளியிட்டவர்கள் தங்களுக்கு மானம் உள்ளதாக நினைத்தால் ஏன் மொட்டைப் பிரசுரம் அடிக்க வேண்டும். இது கருத்துச் சுதந்திரம் மிக்க நாடு. அதுவும் நீங்கள் சொல்லும் கருத்து சரியானதாக இருந்தால் அதனை வெளிப்படையாகச் சொல்லலாமே.

அமெரிக்க அரசு விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பு எனக் கூறித் தடை செய்து உள்ளது என்பதற்காக எங்களில் எத்தனை பேர் மக்டோனால்ஸ்சையும் கெ எப் சி யையும் பகிஸ்கரித்து உள்ளோம். பிரித்தானியா புலிகளைத் தடை செய்துள்ளது என்பதற்காக நாங்கள் பிரித்தானிய வதிவிட உரிமையை மறுக்கப் போகிறோமா? அதற்காக நாங்கள் மானமிழந்த தமிழர்களா? ஏனைய்யா முழங்காலுக்கும் உச்சந் தலைக்கும் முடிச்சுப் போடுகிறீர்கள்?

## மொட்டைப் பிரசுரம் விட்டவர்கள் யார் :

ஏன் நீங்கள் வெளிப்பட்டால் உங்கள் நலன்கள் வெளிப்பட்டு விடுமா? நீங்கள் பேரம் பேசியது வெளியில் தெரிந்துவிடுமா? இந்தியாவில் உள்ள உங்கள் நலன்கள் பாதிக்கப்படுமா? அல்லது நீங்களோ உங்கள் உறவுகளோ தமிழ் சினிமா பார்க்கப் போவது வெளியில் தெரிந்துவிடும் என்று எண்ணுகிறீர்களா? 'தமிழே ஒழுங்காகப் பேச முடியாத இந்தத் "டமிழர்' ....' என்று எழுதியிருக்கிறீர்களே உங்கள் பிள்ளைகள் சரியாகத் தமிழ் பேசுகின்றார்களா? அவர்கள் எத்தனை நாளைக்கு தமிழ் பேசுவார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?

இந்த நட்சத்திர இரவை பகிஸ்கரிப்பது என்ற பிரசுரத்தின் பின்னால் உள்ளவர்கள் மேற்கொண்ட பேரம் பேசலின் தோல்வி அல்லது பேரம் பேசலுக்கான நிர்ப்பந்திப்பாக இந்த பகிஸ்கரிப்பு உள்ளது என்றும் ஒரு செய்தி தெரிவிக்கிறது. இது தான் அந்தப் பகிஸ்கரிப்பின் பின்னணியில் இருக்குமானால் அது மிகவும் கேவலமான ஒரு செயற்பாடு என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

## திரையுலகம் :

தமிழகத் திரையுலகம் தொடர்பான சில விடயங்கள் சர்ச்சைக்குரியவையாகவே உள்ளது. காலாச்சாரச் சீரழிவு, ஆங்கிலக் கலப்பு, வன்முறை போன்ற விடயங்கள் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு மட்டுமல்ல தமிழகத்தில் உள்ளவர்களுக்கும் உள்ள பிரச்சினை. இது சினிமா பற்றி உள்ள சர்வதேசப் பிரச்சினையும் கூட. மேற்கு நாடுகளில் கூட ஹொலிவூட் படங்கள் வன்முறையை விதைக்கின்றன என்ற குற்றச் சாட்டு உண்டு.

அது சினிமாவின் மற்றுமொரு பக்கம். அதனை மக்களுக்குத் தெரிவிக்க அங்கிருந்து வரும் நடிகர், நடிகைகளின் நிகழ்ச்சியை பகிஸ்கரிக்கச் சொல்லுவது அடாவடித்தனமானது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் எம் ஜி ஆர் அளித்த பங்களிப்பு வரலாற்று உண்மை. யாழ் நூலகத்துக்கு எம் ஜி ஆர் வழங்கிய புத்தகங்கள் இன்னமும் இலங்கைத் தமிழர்களின் காய்வெட்டல்களால் யாழ் நூலகத்துக்குச் செல்லவில்லை. விஜயகாந்த் ஒரு இனப்பற்றுக் கொண்ட நடிகர் என்பது அனைவருக்கும் தெரியும். அவர் தனது மகனுக்குக் கூட பிரபாகரன் என்று பெயர் வைத்தது இனப்பற்றின் காரணமாகத் தான். ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட போது விஜயகாந்தின் வீடு தாக்கப்பட்டது. தாக்குதலில் ஈடுபட்டவர்களில் இலங்கைத் தமிழர்களும் அடங்குவர்.

## நல்ல படைப்புகளை ஊக்குவிப்போம்

ஐரோப்பியத் திரைப்பட விழா ஒன்று 2001ல் இலண்டன் சினி சங்கத்தால் நடத்தப் பெற்றது. அதில் யதார்த்த சினிமாப் படங்கள் வெளியிடப்பட்டது. இந்தியாவிலும், புலம்பெயர்ந்த நாடுகளிலும் தயாரிக்கப்பட்ட சிறந்த விவரண மற்றும் குறும்படங்கள் காண்பிக்கப்பட்டது. அதில் நட்சத்திரங்கள் இல்லை, கனவுக் காட்சிகள் இல்லை, நடைமுறை வாழ்க்கை படமாக்கப்பட்டது. ஒரு வாரத்திற்கு மேல் 20க்கும் மேற்பட்ட படங்கள் காண்பிக்கப்பட்டது. கலந்து கொண்டவர்கள் 20 பேரிற்கும் குறைவானவர்கள். ஒருநாள் மாலைக் காட்சியில் இயக்குநர், வெளியீட்டாளர் உட்பட 6 பேர் மட்டுமே வந்திருந்தனர். இன்று இந்த துண்டுப் பிரசுரம் விட்டவர்கள் அன்று எங்கு சென்று ஒழிந்தார்கள். விழிப்புணர்வுடைய இவர்கள் யாரும் நல்ல படைப்புகளை ஏன் ஊக்குவிக்க விரும்புவதில்லை.

நட்சத்திர இரவை பகிஸ்கரிப்போம் என்ற துண்டுப் பிரசுரத்தை மறைந்திருந்து விட்டவர்கள் உண்மையில் ஈழத்தமிழர் படைப்புகளை வரவேற்பதானால் அவற்றை ஊக்குவிக்க முன்வரவேண்டும். பல ஈழத்தமிழ் இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் இல்லாமல் மிகவும் கஸ்டப்படுகின்றனர். அவர்களுக்கு கைகொடுக்கத் தயாரா? புலம்பெயர்ந்த இயக்குநர்கள் அஜீவன், ரகுநாதன், கீர்த்தி, மைக்கல், சன், அருந்ததி போன்ற பலர் பல படைப்புகளை உருவாக்கி உள்ளனர். மொட்டைப் பிரசுரங்களை வெளியிடுவதை விட்டுவிட்டு ஆக்க பூர்வமாக ஈழத்துக் கலையையும் கலைஞர்களையும் வளர்க்க முயற்சி எடுப்போம்.

எம்மைத் திருத்திக் கொள்வோம் :

விழிப்புடைய தமிழர்கள் இங்கு செய்ய வேண்டியது என்னவெனில்; புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு உதவுகிறோம் என்று கூறிக் கொண்டு தமிழ் பொது அமைப்புகளில் இருந்து மக்களுக்குச் சேர வேண்டிய பல நூறாயிரம் பவுண்களை மோசடி செய்யும் நபர்களை அம்பலப்படுத்த வேண்டும். ஈழபதீஸ்வரர் ஆலயத்து உண்டியலை வீட்டுக்கு கொண்டு செல்பவர்களை பின்னர் அவ்வாலயத்தின் நூறாயிரம் பவுணை மோசடி செய்தவர்களை அம்பலப்படுத்த வேண்டும், தமது கொள்ளைகளையும் மோசடிகளையும் தலைவர் பிரபாகரனதும் ஆலோசகர் பாலசிங்கத்தினதும் படத்தைப் போட்டு மறைக்க முயலும் விடுதலை போன்ற மொட்டைப் பத்திரிகைக்குப் பின்னால் உள்ளவர்களை அம்பலப்படுத்த வேண்டும். இலண்டனில் இருந்து அல்லலுறும் மக்களுக்காக அனுப்பிய பணத்தை இலங்கையில் மோசடி செய்யும் பேர்வழிகளை அம்பலப்படுத்த வேண்டும். இதையெல்லம் கவனிக்காமல் முற்றிலும் வியாபார நோக்கில் நடைபெறும் பொழுது போக்கு நிகழ்ச்சியான நட்சத்திர இரவைத் தூக்கிப் பிடிப்பது உலக்கை போற வழியை விட்டு விட்டு ஊசி போற துளையை பிடிப்பது போன்று இருக்கின்றது.

## பொறுப்புடன் செயற்படுவோம் :

பொறுப்பற்ற முறையில் இந்த பகிஸ்கரிப்பு முயற்சியில் இறங்கி உள்ளவர்கள் இது சராசரி இந்தியத் தமிழனில் இது என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அறிந்திருக்க வேண்டும். இம்மொட்டைப் பிரசுரம் அவர்களை மிகவும் அவமானப்படுத்தும் விதத்திலும் கொச்சைப்படுத்துவதாகவும் கிண்டலடிப்பதாகவும் அமைந்து உள்ளது. இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு இன்றும் தமிழகம் தஞ்சம் வழங்கி உள்ளது. இன்னும் நூற்றுக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் தினமும் இந்தியாவுக்கு உலகின் பல்வேறு பாகங்களில் இருந்தும் சென்று வருகிறார்கள். இங்கு வெளியிடப்பட்ட ஒரு மொட்டைப் பிரசுரம் போல் தமிழகத்தில் உள்ள சில பொறுப்பற்றவர்கள் விஷமத்தனமாக இலங்கைத் தமிழர்கள் பற்றி மொட்டைப் பிரசுரம் விட்டால் அதனை ஏற்றுக் கொள்ள முடியுமா? சிந்தித்து பொறுப்புடன் செயற்படுவோம்.

## குழப்பங்கள் :

கலையும் கலைஞர்களும் பரிமாறப்பட வேண்டியவை. அது எப்போதும் இரு வழிப்பாதையானது. அதை ஒரு வழியாக்குவது ஒரு போதும் எமக்கு பலன் தராது. நாம் யாருக்கும் கதவடைக்க வேண்டியதில்லை. நீங்கள் மக்களுக்கு நல்ல படைப்புகளைக் கொடுக்க வழி செய்யுங்கள். மக்கள்

For News & Advertising: 020 8952 5677 For Distributions : 020 8905 7775

அதை நாடிச் செல்வார்கள். அதைவிட்டுவிட்டு குறுக்கு வழியில் முயற்சி செய்து இரண்டு தமிழ் சமூகங்களுக்கும் இடையில் உள்ள நல்லுறவைப் பாழடிக்காதீர்கள்.

இன்று புலம்பெயர்ந்த அனைத்துத் தரப்பினரும் சினிமாக் கலைஞர்களை இங்கு வரவழைத்து பொழுது போக்கு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். இந்த நட்சத்திர இரவையும் விடுதலைப் போராட்டத்தையும் தமிழின உணர்வையும் போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அரசியலை அரசியல் தளத்திலும், கலையை கலையின் தளத்திலும், சினிமாவை சினிமாவின் தளத்திலும் நின்று விமர்சிக்கும் ஒரு பண்பை வளர்த்துக் கொள்வோம். அரசியல், கலை, சினிமா எல்லாமே ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டிருந்தாலும் அவை ஒவ்வொன்றுக்கும் தனித்துவம் உண்டு என்பதால் அவற்றை அவை, அவற்றின் தளங்களில் இருந்து தான் பார்க்க வேண்டும்.

# பணம் கொடுத்து நஞ்சூட்டுகின்றனர்

விற்றமின் மற்றும் கனிப்பொருள் மாத்திரைகளை அளவுக்கு அதிகமாக உள்ளெடுப்பவர்கள் தம்மை நஞ்சூட்டுவதாக உணவுத் தரக் கட்டுப்பாட்டு அமைப்பு தெரிவிக்கிறது. பிரித்தானியர்கள் ஆண்டொன்றுக்கு £175 மில்லியனை விற்றமின் மற்றும் கனிப்பொருள் மாத்திரைகளுக்குச் செலவிடுவதாகவும் அவை உடல்நலத்தைக் கெடுப்பதாவும் அத்தரக்கட்டுப்பாட்டு அமைப்பு மேற்கொண்ட ஆய்வு தெரிவிக்கிறது. பிரித்தானியாவில் 50 வீதமானவர்கள் மாத்திரைகளை எடுப்பதாகவும் அத்துடன் அவர்கள் உட்கொள்ளும் உணவிலும் அவை அடங்கி இருப்பதால் உடலில் அப்பதார்த்தத்தின் அளவு தேவைக்கதிகமாக அதிகரிக்கிறது. இது ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்படுகிறது.

வயதானவர்கள் விற்றமின் ஏ யை அதிகமாக உட்கொள்ளும் போது ஒஸ்ரியோபொறோஸிஸ் (என்பு பாதிப்பு) ஏற்படுகிறது. அதிக அளவு விற்றமின் சி சிறுநீரகக் கற்களைத் தோற்றுவிக்கிறது. விற்றமின் டி அதிகரிக்கும் போது மாரடைப்பு, அதிர்ச்சி, ஏற்படுகிறது. செலினியம், கொப்பர், சிங் ஆகிய தாதுப் பொருட்கள் நரம்புப் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் சிறு பிரிவினருக்கே இந்த மாத்திரைகள் சிறிய அளவில் உதவுவுதாகக் குறிப்பிடும் உணவுத் தரக்கட்டுப்பாட்டு அமைப்பு பெரும்பாலானவர்களில் அது மிகக் குறைந்த நன்மையையே பயப்பதாகத் தெரிவிக்கிறது. பெரும்பாலானவர்கள் சுகாதாரமான சமப்படுத்தப்பட்ட உணவு முறைமூலம் அனைத்து சத்துக்களையும் பெறலாம் என அவ்வமைப்பு தெரிவிக்கிறது.

# எங்கு சாப்பிடுகிறீர்கள்

நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள் என்பதிலும் பார்க்க எங்கு சாப்பிடுகிறீர்கள் என்பதைப் பொறுத்துத்தான் சாப்பாட்டில் திருப்தி ஏற்படுவதாக ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. இன்னும் சில வேளைகளில் யார் சமைக்கிறார்கள், யார் பரிமாறுகிறார்கள் என்பது போன்ற விடயங்களும் முக்கியமாக அமைந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# இலத்திரன் மூக்கு

சுவாசப்பையில் ஏற்படும் புற்றுநோயைக் கண்டு பிடிக்க இலத்திரன் மூக்கை இத்தாலியில் ரோம் பல்கலைக் கழகத்தில் கண்டு பிடித்து உள்ளார்கள். ஒருவரின் மூச்சை மணந்து அவருக்கு சுவாசப்பையில் புற்றுநோய் உண்டா இல்லையா என்பதை அந்த E-மூக்குத் தெரிவிக்கும். சுவாசம் சம்பந்தமான நோயால் பாதிக்கப்பட்டவர்களின் மூச்சில் அதற்கான இரசாயனங்கள் வெளிவிடப்படும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் மேற்கொண்ட இந்த முயற்சி தற்போது வெற்றி அளித்து உள்ளது.

இப்புதிய மூக்கு 60 பேரில் பரிசோதிக்கப்பட்டது. அவர்களில் 30 பேர் சுவாசப்பை புற்றுநோய் உடையவர்கள். இலத்திரன் மூக்கு புற்றுநோய் உடைய 30 பேரையும் சரியாக அடையாளம் காட்டி உள்ளது. ஆனால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை மிக மிகச் சிறிது எனவும் அதனை வைத்து எந்த முடிவுக்கும் வரமுடியாது எனவும் பிரித்தானிய புற்றுநோய் ஆராய்ச்சி மையம் தெரிவித்து உள்ளது. இப்புதிய மூக்கு வெற்றிகரமாக அமைந்தால் புகைப்பவர்கள் அடிக்கடி தங்கள் மூச்சைப் பரிசோதித்து தங்களுக்கு புற்றுநோய் உள்ளதா என்பதை தெரிந்து கொள்ளலாம்.

# சாந்தமும் அமைதியும் வேண்டும்

குழந்தைகள் பிறந்ததும் அவர்களுக்கு கூடிய சந்தமும் அமைதியும் வழங்கப்பட வேண்டும் என சன் பிரான்சிஸ்கோ பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றது. எலிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், பின்னணியில் உள்ள சத்தம் சந்தடி குழந்தைகளில் பேச்சு விருத்தியைக் கட்டுப்படுத்தும் அல்லது தடுக்கும் எனத் தெரிவிக்கிறது. இன்றைய நவீன இல்லங்கள் தொலைக்காட்சிகள், இசைச் சாதனங்கள், போக்குவரத்து இரைச்சல்கள் என சத்தத்தால் நிறைந்து உள்ளது என்றும் இது புதிய குழந்தைகளின் மூளையின் சத்தத்தைப் பிரித்து உணரும் பகுதியில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# திருப்பி அனுப்புவதை நிறுத்த மக்களவையில் கூட்டம்

இலங்கையில் நிலவும் தற்காலிக சமாதான நிலையை காரணம் காட்டி இலங்கைத் தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுவதை நிறுத்த வெஸ்ற்மினிஸ்டர் மக்களவையில் சந்திப்பு ஒன்றுக்கு ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது. மே மாதம் 19ம் திகதி நடைபெறவுள்ள இச்சந்திப்பில் பிரித்தானியாவில் வாழும் இலங்கை அகதிகள் பிரச்சினையுடன் தொடர்புடைய அரசியலாளர்கள், மனித உரிமை அமைப்புகள், சட்ட நிறுவனங்கள், ஊடகங்கள், பொது மக்கள் என பல்வேறு தரப்பினரும் ஈடுபட உள்ளனர்.

தஞ்சம் கோரும் இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்கும் Commette to Defend Srilankan Tamil Assylum Seekres - CDSTAS அமைப்பு பெப்ரவரி 28ல் கூடிய போராட்ட முன்னெடுப்புகளின் அடுத்த கட்டமாக வெஸ்ற்மினிஸ்ரரில் இச்சந்திப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இப்போராட்ட நடவடிக்கைகளை ரெட்பிறிஜ் தொழிற்கட்சி உறுப்பினரான தவத்துரை ஜெயரஞ்சன் முன்னெடுக்கின்றார். இவரே CDSTAS அமைப்பின் தலைவர் ஆவார். பிரித்தானிய அகதிகள் அமைப்பின் அலுவலர் கெ சிதம்பரநாதன், தமிழர் புனர்வாழ்வுக் கழக முக்கிய உறுப்பினர் போஸ், நியூ□ாம் கவுன்சிலர் போல் சத்தியநேசன் ஆகியோர் இப்போராட்ட ஏற்பாடுகளில் முன்னணியில் செயற்படுகின்றனர்.

பெப்ரவரி 28ல் இல்போர்ட் நகர மண்டபத்தில் நடைபெற்ற அகதிகள் எழுச்சிக் கூட்டத்தில் 700க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். பிரித்தானியாவில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற மாபெரும் பொதுக் கூட்டமாக இது அமைந்தது. பிரித்தானிய பாராளுமன்றத்துக்கு ஊடாக அழுத்தங்களை வழங்கி இலங்கைத் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதை கட்டுப்படுத்துவதே இப்போராட்டத்தின் நோக்கமாக அமைந்து உள்ளது.

இப்போராட்டத்தில் அனைத்துத் தமிழ் மக்களும் கலந்து கொண்டு தஞ்சம் மறுக்கப்படுவது அநியாயமானது என்பதை பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என இப்போராட்டத்தின் ஏற்பாட்டாளர்கள் உதயனுக்குத் தெரிவிக்கின்றனர்.

# குடற் புற்றுநோயை தவிர்க்கலாம்

நார்ப்பதார்த்தங்களான பழங்கள், காய்கறி வகைகளை உண்பதன் மூலம் குடற் புற்றுநோயைத் தவிர்க்கலாம் என கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். ஐரோப்பாவில் 500,000 பேரின் உணவுப் பழக்கத்தை வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்விலேயே இது தெரியவந்து உள்ளது. குடற் புற்றுநோய்க்கும் நார்ப் பதார்த்தத்திற்கும் தொடர்பு இல்லை என்ற அமெரிக்க விஞ்ஞானிகளின் முன்னைய ஆய்வை இவ்வாய்வு மறுக்கிறது. நார்ப்பதார்த்தங்களை குறைவாக உள்ளெடுப்பவர்கள், உட்கொள்ளும் அளவை இரட்டிப்பாக்கினால் அவர்களுக்கு குடற் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு 40 வீதத்தால் குறைக்கப்படுகிறது என அவ்விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

# நாளுக்கு ஒரு அஸ்பிரின்

நாளுக்கு ஒரு அஸ்பிரின் உள்ளெடுப்பவர்கள் நீண்டகாலம் வாழலாம் என மருத்துவ சஞ்சிகையான Medical Hypotheses தெரிவிக்கிறது. 50 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவரிலும் இம் மாத்திரை ஆயுட்காலத்தை அதிகரிப்பதாக இதில் மேற்கொள்ளப்பட்ட முறையான ஆய்வு தெரிவிக்கிறது. நீண்டகாலம் அஸ்பிரின் பயன்படுத்துபவர்கள் தமது தொண்ணுறுக்களில் வாழும் வீதத்தை இரட்டிப்பாக்கும் எனவும் அச்சஞ்சிகை தெரிவிக்கிறது. அஸ்பிரின் வயதாகும் போது ஏற்படும் பல நோய்களுக்கு நிவாரணியாக இருப்பதாக அச்சஞ்சிகை சுட்டிக் காட்டுகிறது.

குறைந்த அளவு அஸ்பிரினை தினமும் எடுக்கும் போது குருதிச் சுற்றோட்டப் பிரச்சினைகள் 25 வீதம் குறைக்கப்படுகிறது. இதய நோயால் ஏற்படும் மரணம் 25 - 50 வீதத்தால் குறைக்கப்படுகிறது. மார்புப் புற்றுநோய் ஏற்படுவதை 50 வீதத்தால் குறைப்பதாகவும் ஆய்வு தெரிவிக்கின்றது. பிரித்தானியாவில் இதய சம்பந்தமான நோயே பெரும் ஆட்கொல்லி நோயாக இருப்பது தெரிந்ததே.

MANAKTALA &CO.
Chartered Accounts
* Tax / VAT Return
* Accounts / Auditing
* Any needs for Accounts Purpose
Call Me
MR. PRADEEP MANAKTALA F.C.A, M.Sc.
on
Tel: 020 8579 7333
Fax: 020 8566 2028
THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND & WALES
Barclays Bank Chambers,
17 Leeland Mansions,
Leeland Road, West Ealing,
London W13 9HE

J K SHAH
Chartered Certified Accountants
& Registered Auditors
e-mail: jk@jkshah.com
website: www.jkshah.com
570 Romford Road, Manor Park
London E12 5AF
TEL: 020 8553 2436
FAX: 020 8514 6939

K.M.S. Accountants
For FREE Consultation on
Self Assessment Returns,
CIS25 refunds,
Financial Accounts for
Limited Companies/
Sole Traders, Company Formation,
VAT, PAYE &
Book-keeping Services
Tel: 020 8503 3375
Email: kms_group@hotmail.com

BHANOT & CO.
Chartered Accountants
A COMPLETE RANGE OF SERVICES AT REASONABLE RATES
TAX
AUDIT
FINANCE
PENSIONS
MORTGAGES
BOOK-KEEPING
CASH-FLOWS
ACCOUNTS
PAYROLL
PLANS
VAT
020 8840 8844
Email: anil@bhanot.co.uk

A PROFESSIONAL SERVICE FOR YOUR BUSINESS
SP SHAH P.J. & CO
Certified Accountant & Registered Auditor
Covering London & The Home Counties
1st Class Service at Reasonable Rates
* SOLE TRADERS * PARTNERSHIPS * LIMITED COMPANIES
* ACCOUNTS/VAT * SELF ASSESSMENT * TAX PLANNING
* BOOK-KEEPING BUREAU * PAYROLL BUREAU * SUB-CONTRACTORS
ACCA
Registered as Auditor by the Association of Chartered Certified Accountants
020 8907 1636 Fax 020 8907 9555
SHAH P.J. & COMPANY LIMITED 301 Kenton Lane, Harrow, Middx. HA3 8RR

MORTGAGE PLUS (London) LTD
Mortgages Tailor-made for You
* Specialist in CCJ/Default Cases
Tel:
020 8571 2570
07710 150713
81, South Road, Southall, Middx.
Your home is at risk if you fail to keep up repayments on loans secured on it.

# எலிகளுடன் கிடந்தோம், குளிர்நீரில் கோப்பை கழுவினோம் - தமிழ் இளைஞர்கள்

## பிரித்தானிய முதலாளிக்கு எதிராக பிரான்ஸ் தமிழர்கள் வேலைநிறுத்தம்

20 தமிழர்கள் தங்கள் முகாமையாளருக்கு எதிராக வேலை நிறுத்தத்தில் குதித்து உள்ளனர். ஏழு கோரிக்கைகளை முன் வைத்து உணவகத் தொழிலாளர்களான இருபது தமிழ் இளைஞர்கள் பாரிசில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்து உள்ளனர். ஏப்ரல் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைநிறுத்தம் இரண்டு வாரமாக நடைபெற்றது.

The frogpubs எனும் உணவகத்தின் முதலாளிக்கும் அங்கு பணியாற்றும் தமிழ்த் தொழிலாளிகளுக்கும் ஏற்பட்ட தகராறே பெரிய தொழிற் சங்கப் போராட்டமாக வெடித்திருக்கிறது. இந்த உணவக முதலாளிக்கு பிரான்ஸில் ஏழு றெஸ்றோரன்றுகளும் போர்த்துக்கல்லில் ஒரு றெஸ்றோரன்றும் இருக்கிறது. இவர் பிரித்தானிய நாட்டை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**உணவகங்களில் தமிழர்கள் :**

தமிழர்கள் வேலை செய்யாத உணவகங்கள் பாரிசில் இல்லை என்றே சொல்லலாம். இதற்கு பல காரணங்கள் உண்டு. இவர்கள் இலாபகரமான தொழிலாளிகள், சகிப்புத்தன்மை கொண்டவர்கள், சட்டதிற்கு புறம்பாக முதலாளிக்கு உழைத்துக் கொடுக்கக் கூடியவர்கள் என்பதும் அவற்றுள் சில காரணங்களாகும். ஆனால் தற்பொழுது அந்த நிலைமைகளில் மாற்றம் அடைந்து விட்டிருக்கிறது. அதற்கு உதாரணமாகவே மேற்குறித்த வேலை நிறுத்தம் கருதப்படுகின்றது.

நாங்கள் அடிமைகள் அல்ல என்ற முழக்கம் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் நாளொன்றுக்கு பத்தாயிரத்திற்கும் அதிகமாக விநியோகிக்கப்படுவதாக அந்த உணவகத்தில் பணி புரிந்து தற்போது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ரூபன் சொல்கிறார். இதனை நாங்கள் சிலருடைய பிரச்சனையாக பார்க்கவில்லை இது ஒட்டுமொத்தமான எங்களுடைய பிரச்சனை என்கிறார் ரூபன்.

**முதலாளியின் எண்ணம் :**

முதலாளிக்கு தனக்கு கீழ் வேலை செய்த இலங்கைத் தமிழ் அகதித் தொழிலாளர்கள் இப்படி பெரிய தலையிடியாக மாறியது ஆச்சரியமாக இருக்கின்றது. ஏனெனில் இலங்கைத் தமிழ் தொழிலாளர்கள் மிகுந்த விசுவாசமான வேலையாட்கள் என்றும் தலையைக் குனிந்து கொண்டு போகின்றவர்கள் என்றும் பயந்து விடுவார்கள் என்றும் தாம் எதிர்பார்த்திருந்ததாகவும் நிலைமை இந்த அளவு பாரதூரமாக மாறும் என தாம் எதிர்பார்த்திருக்கவில்லை என்றும் முதலாளியினது சகாக்கள் தெரிவித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த முதலாளி பிரச்சனை முற்றிய போது தனக்குச் சார்பான தொழிற் சங்கத்திற்குள் மடக்கிப் போட்டு காரியம் சாதிக்க முயன்றிருக்கின்றார். தனிப்பட்ட முறையில் எச்சரிக்கை கடிதங்களை எழுதி மிரட்டியிருக்கின்றார். ஒரு நாளில் மட்டும் ஒருவருக்கு நான்கிற்கு மேற்பட்ட எச்சரிக்கை கடிதங்களை அனுப்பி வைத்திருக்கிறார். இதுவரை அங்கு பணி புரிந்த தொழிலாளர்களுக்கு ஐம்பதிற்கும் மேற்பட்ட கடிதங்கள் அவரால் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

**முக்கியத்துவம் :**

பிரான்ஸின் தேசிய தொலைக்காட்சி சேவை மூன்றில் இவர்களது வேலை நிறுத்தப் போராட்டம் முக்கியத்துவப் படுத்தப்பட்டிருக்கிறது. F.P.P எனும் பிரெஞ்சு வானொலியும் ஒன்றரை மணி நேரமாக இவர்களது பிரச்சனைகள் குறித்த கலந்துரையாடல்களை நிகழ்த்தியிருக்கிறது. ஆயினும் உதயன் செய்தி சேகரிக்க பிரான்சில் உள்ள தமிழர்களுடன் தொடர்பு கொண்ட போது பல தமிழர்கள் இவ்வேலை நிறுத்தப் போராட்டம் பற்றி அறிந்திருக்கவில்லை என்பது தெரியவந்தது. தமிழ் தொலைக் காட்சிகளில் நாடகமும் சினிமாவும் பார்ப்பதற்கு அப்பால் சிலர் எதையும் அறிந்திருக்கவில்லை என்பது அப்போது புலப்பட்டது.

**போராட்டத்துக்கான உந்துதல்**

இதுபற்றி பிரெஞ்சு செந்தனிஸ் பல்கலைக் கழகத்தில் அரசியல் பட்டப்படிப்பை மேற்கொண்டு வரும் விக்னேஸ்வரன் 'அந்த The frogpubsன் நிர்வாக அமைப்பு தனக்கு ஒரு காலனித்துவ நாடொன்றையே கண் முன் நிறுத்துகிறது' என்கிறார். மொழி புரியாதவர்களுக்கு உதவும் நோக்குடன் இயங்கி வரும் விக்னேஸ்வரனிடம் இந்த இளைஞர்கள் மாலை நேரங்களில் மொழி கற்று வந்திருக்கிறார்கள். அவரிடம் இவர்கள் தங்கள் பிரச்சனைகளை முறையிட்ட போதே விக்னேஸ்வரன் அவர்களுக்கு உதவ முன் வந்திருக்கிறார்.

சமையல்காரர்களில் இருந்து கோப்பை கழுவுகிறவர்கள், துடைப்பவர்கள், கூட்டுபவர்கள் எல்லோரும் இலங்கைத் தமிழர்களாக இருக்கிறார்கள். வெளியில் வரவேற்பாளர்களாக, நடத்துனர்களாக, நிர்வாகிகளாக, மேற்பார்வையாளர்களாக அமெரிக்கர்களும் பிரிட்டிஸாரும் வேறு வெள்ளையர்களும் இருக்கிறார்கள்.

மேலும் அங்கு தொழில் புரிபவர்களின் அடிப்படை மனித உரிமைகள் மதிக்கப்படவில்லை, அவர்களுடைய உணர்வுகள் மதிக்கப்படவில்லை அவர்களுடனான வேலை ஒப்பந்தம் மதிக்கப்படவில்லை, அவர்களுடைய கேள்விகள் எவற்றுக்கும் பதில் அளிக்கப்படவில்லை. இந்த நிலையிலேயே அவர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்திருக்கிறார்கள் என்று அந்த இளைஞர்களின் நியாயத்தை எடுத்துக் காட்டினார்

# கொலையாளியை அடையாளம் காட்டுங்கள்

## பொலீஸ் வேண்டுகோள்

ஜுன்டா என்ற திலீபன் தங்கவடிவேல்(23) கொலையில் சம்பந்தப்பட்டவர்களை அடையாளம் காட்டும் படி இக்கொலையை விசாரணை செய்துவரும் Serious Crime Group - DCI Broster மே மாதம் 6ம் திகதி கேட்டுக் கொண்டு உள்ளார். இல்போர்ட் ஹென்லி வீதியில் மார்ச் 19ல் இடம்பெற்ற இக்கொலை தொடர்பாக இன்னமும் யாரும் கைது செய்யப்படவில்லை. '23 வயதான இளைஞன் அநியாயமாக வெட்டியும் சுட்டும் கோரமான முறையில் கொல்லப்பட்டு உள்ளார்' என தனது வேண்டுகோளில் தெரிவித்த புலனாய்வு அதிகாரி சம்பந்தப்பட்டவர்களை அடையாளம் காட்ட தமிழ் மக்கள் முன்வர வேண்டும் என்று உதயன் பத்திரிகை மூலம் கேட்டுக் கொண்டுள்ளார். தகவல் கொடுக்க விரும்புபவர்கள் இவ்விலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தகவல் வழங்க முடியும். (020 7321 7228 அல்லது 0800 555 111)

காலை ஆறு மணியளவில் இச்சம்பவம் நடைபெற்ற போது அவ்வீட்டில் பல இளைஞர்கள் தங்கி இருந்தனர். தாக்குதலில் 10 பேர் வரை ஈடுபட்டு உள்ளனர். திலீபனுடைய சகபாடிகள் தாக்குதலில் ஈடுபட்டவர்களைத் தெரிந்திருந்த போதும் அந்தத் தகவல்களை பொலிஸிற்கு சொல்லாமல் மறைப்பதாகவும் தாங்கள் நேரடியாக பழிவாங்க முற்படுவதாகவும் உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பைச் சேர்ந்த திலீபனின் பெற்றோர்களான திரு திருமதி தங்கவடிவேலும் அவர்களது இளைய மகனும் மனோபார்க்கில் ஏப்ரல் 18ல் நடைபெற்ற இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர். தங்கவடிவேல் குடும்பத்தினர் மிகுந்த கஸ்டத்தின் மத்தியில் திலீபனை வெளிநாட்டுக்கு அனுப்பியதாகவும் திலீபன் தங்கள் குடும்பத்தை பார்ப்பான் என எண்ணியதாகவும் இறுதிச் சடங்கில் கலந்த கொண்ட அக்குடும்பத்தின் நெருங்கிய உறவினர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். ஆனால் தனது மகன் கொல்லப்பட்டதை எண்ணி தாயார் மிகுந்த துக்கத்தில் உள்ளதாக அவ்வுறவினர் மேலும் தெரிவித்தார். பெற்றோர்கள் மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் பிள்ளைகளை இங்கு அனுப்பிய போதும் வெட்டுக் கொத்துக்களில் அவர்களைப் பலி கொடுப்பது மிகவும் அநியாயமானது என் அவ்வுறவினர் வேதனையுடன் தெரிவித்தார். இப்போது அப்பெற்றோரின் எண்ணமெல்லாம் தங்கள் 2வது மகன் மீதே உள்ளது என அவர் தெரிவித்தார்.

# ஐரோப்பிய மே தின ஊர்வலங்கள்

ஐரோப்பாவில் ஜேர்மன், சுவிஸ், ஸ்பெயின் போன்ற நாடுகளில் மேதின ஊர்வலம் போர் எதிர்ப்பு ஊர்வலமாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. இம்முறை ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பு போர் ஏற்படுத்தியிருந்த விளைவுகள் பிரான்சின் மே தினத்தில் எதிரொலிக்கும் என்ற எதிர்பார்ப்பு பலரிடமும் இருந்த போதிலும் அவ்வூர்வலம் போர் எதிர்ப்பு ஊர்வலமாக அமைந்திருக்கவில்லை. பிரான்ஸில் ஆபிரிக்க கறுப்பின மக்களினதும், ஆசியர்களினதும், விசா இல்லாதவர்களின் ஊர்வலமும் பிரதான ஊர்வலத்துடன் வந்து இணைந்து கொண்டது. ''எங்களுடைய வாழ்க்கை தெருவோரம் கிடக்கிறது'' என்ற கோசத்தை முன் வைத்த படி அது நகர்ந்து கொண்டிருந்தது.

இம் முறை பிரான்ஸில் நடைபெற்ற மேதினப் பேரணியில் வழமையாக கலந்து கொள்ளும் ஈழத் தமிழ் அமைப்புகளின் ஒன்றியம் கலந்து கொள்ளாதிருந்தமையும் அவர்களைத் தேடி மக்கள் அலைந்து திரிந்தமையும் காண முடிந்தது. ஆனால் இலங்கையின் மக்கள் விடுதலை முன்னணி என்னும் ஜேவிபி யின் பத்து பதினைந்து உறுப்பினர்கள் சிவப்பு சட்டை அணிந்து பதாகை தாங்கிய வண்ணம் ஊர்வலத்தில் நகர்ந்து கொண்டிருந்தனர். பிரித்தானியாவில் தமிழ் அமைப்புகள் எதுவும் இவ்வாறான ஊர்வலங்களிலும் சரி ஏனைய போருக்கு எதிரான ஊர்வலங்களிலும் சரி கலந்து கொள்வதில்லை.

இம் முறை பிரான்ஸின் மே தின ஊர்வலத்தில் ஓய்வு ஊதியம் பெறும் வயதானவர் தொடர்பான உள்நாட்டுப் பிரச்சினையே மையமாக அமைந்திருந்தது. வழமைபோல் பிரான்ஸிலுள்ள மிக முக்கியமான தொழிற் சங்கங்களான CGT,CFDT,FSU, UNSA ஆகியவை கலந்து கொண்டிருந்தன. ஊர்வலத்தின் முன் அணியில் 'சேர்ந்து வாழ்வோம்' எனும் கோசம் முன்வைக்கப்பட்டது. ஆசிரியர்களின் தொழிற்ச் சங்கம் 'புரட்சி மட்டும்தான் ஒரே தீர்வு' என்ற கோசத்துடன் நகர்ந்தது. "போவோம் நாங்கள், போவோம் ஒன்றாகப் போவோம் வெற்றி அடைவதற்காக" என்ற பாடலை பாடிய படி மக்கள் அணி அணியாக சென்று கொண்டிருந்தார்கள்.


New Century
Glazing Ltd.
...the ULTIMATE NEWBUILD or Complete refurbishment -
Eurocell's maintainence free PVCu WINDOWS and DOORS, FULLY WELDED and INTERNALLY BEADED...
Member of FENSA
Free Estimates
Tel: 020 8848 0189
Unit 5, Halls Business Centre, Pump Lane, Hayes, Middx.

DISCOUNT (CONSTRUCTION)
DOUBLE
GLAZING LTD.

FACTORY PRICES WHY PAY MORE?
MANUFACTURERS & INSTALLERS OF:
ALUMINIUM • HARDWOOD • RESIDENTIAL DOORS
PORCHES • PATIOS • UPVC
All Work Guaranteed For 10 Yrs
All Work Carried Out By Our Own Qualified Craftsmen
Retail & Trade Welcome All Double Glazing Repair Work Undertaken
Tel: 020 8514 0819 Fax: 020 8514 2333
Showroom: 844 Romford Rd, E12

விக்கினேஸ்வரன்.

### தட்டிக் கேட்ட போது ஏமாற்றப்பட்டனர் :

பிரச்சனைகளைத் தட்டிக் கேட்ட தாசும், லோரன்சும் வேலையிலிருந்து பிழையாக நடந்து கொண்டார்கள் என நீக்கப்பட்டிருக்கிறார்கள். உடுப்பு மாற்ற தங்களுக்கு ஒழுங்கான துப்பரவான இடம் வேண்டும் எனவும் தமது உடுப்புக்களை வைப்பதற்கு அலுமாரிகள் வேண்டும் என்றும் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகள் மறுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் தொழில் சங்கத்திற்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

அதனால் அங்கு வந்திருந்த தொழில் கட்டுப்பாட்டாளர்களின் முன்னிலையில் முதலாளி ஒரு நாடகத்தையே அரங்கேற்றி இருக்கிறார். அவர்கள் முன்னிலையில் எல்லாம் அவர்களுக்குச் செய்வதாகக் கூறி மேலாளர்களாக பணிபுரிபவர்கள் ஆடைகளை வைக்கும் அலுமாரிகளில் ஒன்றை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார். கட்டுப்பாட்டாளர்கள் போன மறுகணமே அவர் உடுப்புக்களை மீண்டும் பொருட்கள் வைக்கும் ஒதுக்குப் புறமான இடத்தில் வழக்கம் போலவே மாற்றும் படி பணித்திருக்கிறார். அவர்களுடைய உடுப்பை எலிகள் கடித்திருக்கிறது. அவர்களுடைய எண்ணை அழுக்கேறிய சப்பாத்துக்களை எலி கடித்திருக்கிறது. எலிப் புழுக்கைகளை உதறிவிட்டு மீண்டும் அணிந்து கொள்ள அவர்களால் முடியவில்லை.

உடுப்புக்களை மாற்றாமல் நின்று வேலை செய்து விட்டு அழுக்கேறிய சப்பாத்துக்களுடனும் அவர்கள் வீட்டிற்கு போய் வந்திருக்கிறார்கள். இதனால் அடிக்கடி சுகயீனம் உற்ற இளைஞன் ஒருவனே நிலைமை மோசம் அடைவதற்கு காரணமாக இருந்திருக்கிறார். கோப்பைகள், கறண்டிகள், அண்டாக்கள், தாச்சிகள் கழுவுவதற்கு சுடுநீர் இல்லை குளிர்ந்த நீரில் பலமணிக்கணக்காக கழுவுவதால் உடலில் குளிர் தாக்கி வருத்தத்திற்கு உள்ளாகியிருக்கிறார். சுடுநீர் பெரும் செலவாகும் என்பதால் குளிர் நீரை உபயோகிக்க பணித்திருக்கிறார் என விரிவாகக் கூறினார் விக்னேஸ்வரன்.

வழமையாக நூற்றுக் கணக்கான வாடிக்கையாளர்கள் அந்த உணவகங்களை நோக்கி படை எடுப்பார்கள். பிரயாணிகளினதும், சுற்றுலாப் பயணிகளினதும் உல்லாச புரியாக விளங்கிய அந்த தவளை உணவகத்தில் இவ்வளவு இலங்கைத் தமிழர்கள் ஈசல்களைப் போல துன்பங்களை நரக வேதனைகளை அனுபவித்தார்களா? என அதன் வாடிக்கையாளர்கள் தற்போது கேள்விகள் எழுப்புகிறார்கள்.

### ஏழு கோரிக்கைகள் :

ஏப்ரல் 26 அன்று தொழில் சங்கத்துடன் இணைந்து அவர்கள் முக்கியமான ஏழு கோரிக்கைகளை முன் வைத்திருக்கிறார்கள். அவையாவன

1. எமக்கு அனுப்பப்பட்ட எச்சரிக்கைக் கடிதங்களை வாபஸ் பெற வேண்டும்
2. தண்டனையில் அனுப்பப்பட்ட லோரன்ஸ், தாஸ் ஆகியோரை வேலையில் மீண்டும் இணைக்க வேண்டும்
3. வேலை ஒப்பந்தத்தை மதிக்க வேண்டும்
4. தொழில் புரியும் இடத்தில் தொழிலாளர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும்
5. விடுமுறை காலங்களை வழங்க வேண்டும்
6. நள்ளிரவுக்குப் பின் வேலை செய்ய நேரிடுவதால் ஏற்படும் பிரயாண செலவை வழங்க வெண்டும்
7. வருடத்துக்கொரு முறை ஊதியத்தை சிறிது உயர்த்த வெண்டும்

என்பதே அக்கோரிக்கைகள் ஆகும்.

# பொறுப்பற்றவர்களுக்கு பதில் தருவதில் பலனில்லை - கவுன்சிலர் சத்தியநேசன்

தமிழ் அமைப்புகள் தொடர்பாக தான் மக்கள் முன் பேசியதில் எந்த மாற்றமும் இல்லை என்றும் தமிழ் பொது அமைப்புகளுக்கு வழங்கப்படும் பல மில்லியன் பவுண்களை சம்பந்தப்பட்டவர்கள் உரிய முறையில் பயன்படுத்த வேண்டும் என்றும் கவுன்சிலர் சத்தியநேசன் மீண்டும் தனது நிலைப்பாட்டை உறுதியுடன் தெரிவித்தார்.

அண்மையில் மொட்டைப் பிரசுரம் ஒன்றில் (ஆசிரியர், நிருபர்கள் இல்லாத அல்லது பதுங்கி இருந்து எழுதுகிறார்கள்) வைக்கப்பட்ட குற்றச்சாட்டுப் பற்றி கவுன்சிலரிடம் கேட்டதற்கு; 'ஆதரமற்ற, சமூகப் பொறுப்பற்ற கூட்டத்தினரின் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் தருவதில் பலனில்லை' எனப் போல் சத்தியநேசன் பதிலளித்தார். தமிழர்களைத் திருப்பி அனுப்புவதை தடுத்து நிறுத்துவதற்காக பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் முடிவில் அவரை சந்தித்த உதயன் நிருபரிடம் பொறுப்பற்றவர்களின் கேள்விகளுடன் தன்னிடம் வரவேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார். அவர் மேலும் பதிலளிக்கையில் சுயநலத்துடனும் தமது சுயரூபத்தையும் மறைக்க முயலும் சிலரின் விசமத்தனமான முயற்சிகளுக்கு தான் பயப்படப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

தனது சொந்தப் பத்திரிகையில் தலைமறைவாக எழுதும் ஜெயதேவன் கவுன்சிலராக முயற்சித்து தோற்றுப் போனதாலும் பல்வேறு மோசடிகளில் சம்பந்தப்பட்டு இருந்ததாலும் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியால் கவுன்சிலர் மீதும் இன்னும் பலரின் மீதும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை வைத்து உள்ளார். இது பற்றி கருத்துத் தெரிவித்த ஜெயதேவனின் முன்னாள் நெருங்கிய நண்பர் இந்திரகுமாரும் மனநோயாளிபோல் செயற்படும் ஜெயதேவனும் கூட்டுச் சேர்ந்து மக்களைக் குழப்புவதாகத் தெரிவித்தார்.

தவறுகளைத் தட்டிக் கேட்க பத்திரிகைக்கு சகல உரிமையும் உண்டு எனத் தெரிவித்த அந்த நண்பர், ஆதாரமற்ற செய்திகளையும் கட்டுக் கதைகளையும் எழுதிவிட்டு சமூகத்தில் நன்மதிப்புடன் செயற்படும் கவுன்சிலர் போல் சத்தியநேசன், கவுன்சிலர் செல்வி எலிசா மன் போன்றவர்கள் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை வைப்பது விசமத்தனமானது எனக் குறிப்பிட்டார். ஜெயதேவன் - இந்திரகுமாரின் விடுதலையில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் உண்மையில் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டார்களா இல்லையா எனத் தெரியாது எனக் குறிப்பிட்ட தமிழர் சமூக வீட்டு வசதிக் கழகத்தின் வீட்டில் வாழும் ஒருவர், மற்றவர்கள் மீது குற்றம் சாட்டும் அளவிற்கு ஜெயதேவனோ இந்திரகுமாரோ யோக்கியர்கள் இல்லை எனக் குறிப்பிட்டார்.

We are a specialist Criminal Firm
24 Hour
POLICE STATION EMERGENCY SERVICE
JUNG & CO
SOLICITORS
41 NORTH ROAD, SOUTHALL, MIDDX. UB1 2JL
TEL: 020 8813 8996 Fax: 020 8813 8559
EMERGENCY Nos. 07956 279 170
07956 867 370
We can also assist with:
Family - Wills & Probate - Conveyancing

Thana & Dev
Solicitors & Administrators of Oaths
முன்னாள் THANA & CO தற்போது Thana & Dev சட்ட நிறுவனம் ஆக புதிய முகவரியில் இயங்குகின்றது.
* Immigration/Work Permit
* House/Shops Buy/Sale/Let
Call us
020 8521 4686
07976 660 635 (24 hrs)
10 Hoe Street, Walthamstow, London E17 4PH

நஷ்டஈடு கோர
Insurance Claims
NO WIN - NO FEE
களவு, நெருப்பு, வெள்ளம், நீர்ச்சேதம் இவைகள் மூலம் ஏற்பட்ட நஷ்டங்களை நிவர்த்தி செய்ய மேலதிக விவரங்களுக்கு நாடுங்கள்
Pearsons
0800 3898 102

SHAN & Co.
SOLICITORS
Experts in Work Permit Applications
Call us now on
189 Northolt Road, South Harrow
Middx. HA2 0LY
Tel: 020 8864 7070
Fax: 020 8864 6070

FREE இலவசம்
The UDHAYAN
உதயன்
UK's No.1 National Tamil Newspaper
ADVERTISE FOR BEST RESULTS
020 8952 5677

UDHAYAN
for your cost effective ADVT.

Genga & Co.
Solicitors
Administor of Oaths
Legal Aid Francise for Crime and Immigration
Spcialists in:
Asylum + Immigration Law
Criminal Law-
Police station
Magitrate court
Crown court
தேர்ச்சி பெற்ற சட்ட வல்லுனர்கள்:
“அகதி அந்தஸ்து குடிவரவு குடியகல்வு குற்றவியல் வழக்குகள்”
”மஜிஸ்டிரேட் நீதிமன்றம், பொலிஸ்நிலையம்”
எந்தவிதமான அவசரத் தேவைக்கும் 24 மணித்தியால தொடர்பு இலக்கம்
Genga & Co.
1st & 2nd Floor
588 High Road Wembley,
Middx. HA0 2AF
07956 569 559
Tel: 020 8795 5020
Fax: 020 8795 5030

தீராத உங்களின் மன வேதனைகள் தீர்ந்திட, உங்களின் வாழ்க்கையில் என்றும் வெற்றி கண்டிட தரிசியுங்கள் அன்னையை
020 8905 7775, 020 8952 7775

WARAN & COMPANY SOLICITORS
Commissioners of Oath
Community Legal Service
Specialists in:
* Immigration & Nationality
* Asylum & Refugee matters
* Housing
* Conveyancing (Residential & Commercial)
* Liquor Licencing
Call Mr. S. K. Nageswaran LLB
Mrs. P. Nageswaran LLB (Hons.), LLB (Lon)
on
Tel: 020 8808 2397
583 High Road, Tottenham, London N17 9SY Fax: 020 8801 8818

EMPLOYMENT CLAIMS
NO WIN NO FEE
We act for Employers and Employees
on NO WIN NO FEE basis the following matters
Unfair Dismissal, Racial Discrimination, Sexual Discrimination, Denial of Promotion, Underpayment, Denial of Holiday pay/sick pay/maternity leave/minimum pay and related issues
Contact Mr. Das on 0790323597/07958618106
MARKANDAN & Co.
Thamil House, 720 Romford Road, Manor Park, London E12 6BT
Tel: 020 8514 8188 Fax: 020 8514 8303
email: mm@markandan-solicitors.co.uk

# கைதிகளுக்கு வழங்கிய பணத்தில் கையாடல்

# ஜெயதேவனின் சூழ்ச்சி அம்பலம் - புதிய திருப்பம்

இலங்கைச் சிறைகளில் உள்ள கைதிகளின் விடுதலைக்காக இலண்டனில் இருந்து அனுப்பப்பட்ட பணத்தில் கையாடல் இடம்பெற்றது என்ற செய்தியில் திரைமறைவு வேலைகள் இடம்பெற்று உள்ளது தெரியவந்துள்ளது. இதில் சட்டத்தரணி விநாயகமூர்த்தி மற்றும் சிவாஜிலிங்கம் ஆகியோர் சம்பந்தப்பட்டு உள்ளனர். என்று இலங்கைப் பத்திரிகைகள் குற்றம்சாட்டி உள்ளன. ஆனால் இக்கையாடல் செய்தி உடன் பல்லாயிரம் பவுண் ஊழலில் சிக்கி உள்ள ஜெயதேவனும் சம்பந்தப்பட்டு உள்ளார்.

தற்போது தமது பெயர்கள் அம்பலமாகியதும் சம்பந்தப்பட்டவர்கள் தங்களுக்கு அனுப்பப்பட்ட பணத்தை செலவிட முடியவில்லை என்றும் அதனை திருப்பி அனுப்ப முயற்சிப்பதாகவும் மற்றுமொரு உத்தியோகபூர்வமற்ற செய்தி தெரிவிக்கிறது. ஆனால் அவர்கள் பணத்தை திருப்பி அனுப்புவதானால் மு சிவராஜா அணியில் உள்ள எஸ் சாந்தகுணவடிவேலுக்கு அனுப்புவதா அல்லது ஆர் ஜெயதேவனுக்கு அனுப்புவதா என்ற சிக்கல் எழுந்து உள்ளதாகவும் தெரியவருகிறது.

கையாடல் அம்பலமான செய்தி வெளியானதும் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையப் பணிப்பாளர் என் கந்தசாமியுடன் சட்டத்தரணி விநாயகமூர்த்தியும், சிவாஜிலிங்கமும் தொடர்புகொண்டு அவரிடம் பணத்தை வழங்க முற்பட்டு உள்ளனர். ஆனால் கையாடல் அம்பலமாகி உள்ள நிலையில் அதனை ஏற்க என் கந்தசாமி மறுத்துள்ளதாகவும் கந்தசாமியின் நெருங்கிய நண்பர் உதயனுக்குத் தெரிவித்தார்.

விநாயகமூர்த்தி, சிவாஜிலிங்கம் இருவரையும் தவிர மேலும் இரு சட்டத்தரணிகளும் அனுப்பப்பட்ட பணத்திற்கு கணக்குக் காட்டவில்லை என்றும் குற்றம்சாட்டப்பட்டு உள்ளது. இலண்டனில் எட்ச்வெயர் றோட்டில் உள்ள தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழருக்கான ஆதரவுக்குழு (Tamil Detainee's Support Group) என்ற அமைப்பு அனுப்பிய பணத்திலேயே இக்கையாடல் இடம்பெற்று உள்ளதாகக் குற்றம்சாட்டப்படுகிறது. இவ்வமைப்பிற்கு இலண்டனில் வாழும் சட்டத்தரணி நேமிநாதன் தலைவராகவும் சாந்தகுணவடிவேல் செயலாளராகவும் உள்ளனர்.

உண்டியல் மூலமாக (வங்கியின் ஊடாக அல்ல) அனுப்பப்பட்ட பணத்தில் 5 இலட்சம் ரூபாய்க்காண கணக்கை சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி காட்டவில்லை என்றும் ரெலொ பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்திற்கு அனுப்பப்பட்ட 75,000 ரூபாய் பணம் கைதிகளின் தேவைக்கு பயன்படுத்தப்படவில்லை என்றும் தெரியவருகிறது. ஆனால் எமக்குக் கிடைத்த ஆவணங்களின் படி சட்டத்தரணி விநாயகமூர்த்திக்கு £1,450 மட்டுமே அனுப்பப்பட்டு உள்ளது. அன்றைய நாணயமாற்று வீதத்தின் படி ஏறக்குறைய ஒரு இலட்சம் ரூபாய்.

விநாயகமூர்த்தியும் சிவாஜிலிங்கமும் சட்டத்தரணிகள் மட்டுமல்ல அரசியல்வாதிகள் அல்லது மக்கள் பிரதிநிதிகளும் கூட. அவர்கள் தமக்கு அனுப்பப்பட்ட பணத்திற்கு கணக்கை காட்டாதது அவர்களது பொறுப்பற்ற நடவடிக்கையாகவே கருதப்படுகிறது. இவ்வாறான பொறுப்பற்றவர்கள் பொதுச் சேவைகளில் ஈடுபடுவது தவிர்க்கப்பட வேண்டும். இவர்களிடம் பல தடவை கணக்குகள் கேட்கப்பட்ட போதும் அதனை அவர்கள் அனுப்பி வைக்கவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது. இவ்வாறான தவறான நடவடிக்கைகளே ஊழல் மோசடிகளுக்கு வித்திடுகின்றன. இந்தக் குற்றச்சாட்டகளில் இருந்து தம்மை இவர்கள் விடுவிக்க வேண்டுமானால் உடனடியாக தாம் பெற்றுக் கொண்ட பணத்திற்கான கணக்கு விபரங்களை ஒப்படைக்க வேண்டும். பொதுச் சேவைகளில் ஈடுபடுகிறோம் என்பதற்காக தான்தோண்றித்தனமாக யாரும் செயற்பட முடியாது.

## மு சிவராஜா உதயனுக்கு அளித்த பேட்டி :

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழருக்கான ஆதரவுக்குழுவின் முக்கிய உறுப்பினரான மு சிவராஜா உதயனுக்கு வழங்கிய பேட்டியில் கையாடல் எதுவும் இடம்பெறவில்லை என்றும் அவர்கள் கணக்குக் காட்டத் தவறி இருந்தார்கள் என்பதே உண்மை என்றும் தெரிவித்தார். மேலும் குற்றம் சாட்டப்பட்டது போல சட்டத்தரணி விநாயகமூர்த்திக்கு 5 இலட்சம் ரூபாய் வழங்கப்பட வில்லை என்றும் 80,000 ருபாய் வரையிலேயே அனுப்பப்பட்டதாகவும் தெரிவித்த மு சிவராஜா இது விநாயகமூர்த்தி, சிவாஜிலிங்கம் ஆகியோருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அரசியல் பிரச்சாரம் எனத் தெரிவித்தார்.

ஆர் ஜெயதேவன் தனது மோசடியை மறைக்க தனது விடுதலை பத்திரிகையில் வெளியிட்ட செய்தியை உண்மையென்றும் அப்பத்திரிகை விடுதலைப் புலிகளின் பத்திரிகை என்றும் நம்பிய இளைஞர்கள்; தங்களைப் பார்க்க வந்த சட்டத்தரணிகளிடம் கேள்வி கேட்டு குழம்பினார்கள் என்றும் மு சிவராஜா உதயனுக்குத் தெரிவித்தார். கணக்குகளை காட்டவில்லை என்பதற்கு மேலாக இதில் எந்தக் கையாடலும் இல்லை என அவர் உறுதியாகத் தெரிவித்தார். செயலாளர் சாந்தகுணவடிவேல் இக்கையாடல் தொடர்பாக மனவருத்தம் தெரிவித்துள்ளாரே என்று நாம் கேட்டதற்கு அப்படி அவர் தெரிவிக்கவில்லை அதுவும் தவறான செய்தி என மு சிவராஜா தெரிவித்தார். தாங்கள் வங்கி மூலமாக பணம் அனுப்பாவிட்டாலும் அங்கு பணம் அனுப்பியதற்கான முறையான பற்றுச் சீட்டுகள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## உள்ளே பூசல் :

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழருக்கான ஆதரவுக்குழுவிற்கான பெருமளவு நிதியை ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் இருந்தே பெறத் திட்டமிடப்பட்டது. அச்சமயத்தில் இவற்றிற்கு முன்னணியில் செயற்பட்ட மு சிவராஜா (ஆலய நிர்வாகத்தின் தலைவர்), ஆர் ஜெயதேவன் (ஆலய நிர்வாகத்தின் செயலாளர் - அவருடைய மைத்துனர் சௌந்தர்ராஜன் தனாதிகாரி), நேமிநாதன் (ஆதரவுக் குழுவின் தலைவர்), சாந்தகுணவடிவேல் (ஆதரவுக் குழுவின் செயலாளர்) ஆகியோர் நட்பாக இருந்தனர். ஆலயம் ஆரம்பிக்கப்பட்ட 1999 நடுப்பகுதி முதல் 2002 ஜனவரி வரை இவர்களுடைய உறவு நீடித்தது. அனால் அதன் பின் ஆர் ஜெயதேவன், மைத்துனர் சௌந்தர்ராஜனுடன் சேர்ந்து ஆலயத்தை தனது குடும்பச் சொத்தாக்க முனைந்ததை அடுத்து; கடந்த ஆண்டு மே 10ம் திகதி ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் ஏற்பட்ட மோதலில் இவர்களுக்கிடையே நிரந்தரமான பிளவு ஏற்பட்டது.

## நம்பியவர்கள் நடுத்தெருவில் :

அதனைத் தொடர்ந்து ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் இருந்து தடுத்து வைக்கப்பட்ட தமிழ் கைதிகளுக்கு கொடுத்து வந்த நிதி நிறுத்தப்பட்டது. பொது மக்களின் பணத்தை பொது விடயத்திற்கு பயன்படுத்துவதற்கு முட்டுக்கட்டை ஏற்பட்டது. சாப்பாட்டுக்கு வழி செய்த கணவன், மகன், சகோதரன் இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்ட நிலையில் அந்தக் குடும்பங்கள் தவித்தன. இங்கு அவர்களுக்காக கோயில் கட்டி பணம் சேர்க்க முற்பட்ட போது கோயில் £100,000 உடன் குடும்பச் சொத்தாக்கப்பட்டது. பொதுச் சொத்தான ஆலயத்தின் £100,000 கணக்கு மக்களுக்குக் காட்டப்பட வில்லை. ஆர் ஜெயதேவன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் பணத்தை சூறையாடியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள ஜெயதேவன் இன்னும் ஆலய பணத்தின் கணக்கு வழக்குகளை பொதுவான முறையில் மக்களுக்கு காட்ட முன்வரவில்லை. ஆலயத்தின் உதவியை வேண்டி நின்ற தடுத்து வைக்கப்பட்ட கைதிகளின் குடும்பங்கள் நடுத்தெருவில் விடப்பட்டன.

## குற்றச்சாட்டுகள் :

தடுத்து வைக்கப்பட்ட தமிழருக்கான ஆதரவுக்குழுவுக்கு ஈழபதீஸ்வரர் ஆலயத்தால் வழங்கப்பட்ட நிதியை ஆர் ஜெயதேவன் நிறுத்தி விட்டதாக மு சிவராஜா 04 மே 02ல் கையொப்பமிட்டு வெளியிட்ட பிரசுரம் ஒன்றில் தெரிவித்தார். அதே பிரசுரத்தில் ஆலயத்திற்கு புதிய நிர்வாகக் குழு உருவாக்கப்பட்டு கோயிலில் சேரும் பணத்தின் பெரும்பகுதி ஈழத்தில் அல்லலுறும் மக்களின் துயரினைக் களையப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

மு சிவராஜாவின் பிரசுரத்திற்கு எதிர்ப் பிரசுரம் விட்ட ஆர் ஜெயதேவன் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழருக்கான ஆதரவுக்குழு மூலம் இலங்கைக்கு £11,000 வழங்கப்பட்டதாகவும் ஆனால் பலமுறை கேட்டும் அங்கிருந்து கணக்கு விபரங்கள் வராததால் நிதிஉதவி நிறுத்தப்பட்டதாகவும் தெரிவித்திருந்தார். மேலும் மு சிவராஜாவின் சட்டத்தரணி நண்பர்கள் உறவினர்கள் மூலம் அனுப்பப்பட்ட பணம் சூறையாடப்பட்டதாகவும் அப்பிரசுரத்தில் ஆர் ஜெயதேவன் குற்றம் சாட்டி இருந்தார்.

## இலங்கைத் தொடர்பு :

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் இலண்டனுக்கு வந்திருந்த போது (அவர் சுட்டுக் கொல்லப்படுவதற்கு ஓராண்டுக்கு முன்) மு சிவராஜா அவருக்கு ஒரு இராப்போசன விருந்து வழங்கி உள்ளார். அப்போது தான் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழருக்கான ஆதரவுக்குழு மூலம் சிறைக் கைதிகளுக்கு உதவுவது பற்றிப் பேசப்பட்டது. அக்காலகட்டத்தில் அப்பாத்துரை விநாயகமூர்த்தி காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்திற்கு

**NOTICE TO ADVERTISERS**


Rajasingham Jeyadevan

The person shown in the photograph is a nuisance caller. As UDHAYAN has already published about his fraudualent activities, we understand that he has indulged himself in making anonymous phone calls/leaflets or sometimes in fake names to our advertisers and acting in a way trying to damage the repution of our Newspaper.
Dear Advertisers, So, kindly ignore his approach in any form. Thank you for bearing the nuisance with us and informing us.

A good Businessmen knew the benefit of Publicity. Inexperienced people's opinion is not the true reflection of the dimension of reach in the Community. As Community is a massive density of people widely scattered at various geographical locations. UDHAYAN is the only hardcopy which has the massive effective reach. Many Advertisers are coming back, realising the fall in Business. Udhayan welcomes you with open arms. Tap the Tamil Community through UDHAYAN. The only effective media.

உதவியாளராக இருந்து உள்ளார். மு சிவராஜா யார் மூலமாக இந்த உதவியை வழங்க முடியும் என்று கேட்ட போது காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் அப்பாத்துரை விநாயகமூர்த்தியை சிபாரிசு செய்திருக்கிறார். அதனைத் தொடர்ந்தே சட்டத்தரணி அப்பாத்துரை விநாயக மூர்த்திக்கு இலண்டனில் இருந்து பணம் அனுப்பப்பட்டது.

## நிதி வழங்கியவர்கள் :

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழருக்கான ஆதரவுக்குழு ஜனவரி 2000 முதல் ஜனவரி 2002 வரை £23,296.32 களை இலங்கையில் உள்ள தமிழ்ச் சிறைக் கைதிகளுக்காகச் சேர்த்து உள்ளது. தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழருக்கான ஆதரவுக்குழுவுக்கு சேர்க்கப்பட்ட பணத்தின் 50 வீதம்வரையான £10,912.02யை ஈழபதீஸ்வரர் ஆலயம் (ஆர் ஜெயதேவன் ஆலய உரிமையை குடும்பச்சொத்து ஆக்குமுன்) வழங்கி உள்ளது. மு சிவராஜா அந்நிதிக்கு £5,450 வழங்கி உள்ளார். டென்மார்க் தமிழர்களிடம் £1,100 வரை சேர்த்து எஸ் சிறிராஜன் வழங்கி உள்ளார். ஈலிங் அம்மன் ஆலயம், டொக்டர் சோமசுந்தரம் (Tamil Prisoners of Conscience), ரி கிருபாகரன் ஆகியோர் முறையே £1,000 வழங்கி உள்ளனர். மேலும் பல தமிழர்களிடமும் அமைப்புகளிடமும் இருந்து ஏனைய நிதி திரட்டப்பட்டு இருந்தது.

## நிதி பெற்றுக்கொண்டவர்கள் :

திரட்டப்பட்ட நிதியில் £16,826.50, 08 ஜனவரி 2000 க்கும் 08 மார்ச் 2003க்கும் இடையே வெவ்வேறு நபர்களுக்கு ஊடாக தடுத்து வைக்கப்பட்டு உள்ள 142 தமிழ் கைதிகளின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டதாக உதயனுக்குக் கிடைத்த தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழருக்கான ஆதரவுக்குழுவின் கணக்கு விபரம் தெரிவிக்கிறது. அதில் சட்டத்தரணி எ விநாயகமூர்த்தி £1450, சட்டத்தரணி திருமதி ஜோய் மகாதேவன் £2,600, சட்டத்தரணி கெ எஸ் ரட்ணவேல் £1,000 என பணம் அனுப்பப்பட்டு உள்ளது. மட்டக்களப்பில் உள்ள ராமகிருஷ்ணன் மிசனூடாக எஸ் கருணையம்மா மற்றும் 11 பேருக்கும் (£1,025), எ பி பேர்னாட் மற்றும் 11 பேருக்கும் (£1,225), சிவராணி இளங்கோ மற்றும் 16 பேருக்கும் (£1,725), செல்வி முத்துசாமி மற்றும் 29 பேருக்கும் (£2,429) அனுப்பப்பட்டு உள்ளது. இதைவிடவும் எஸ் எம் றியால் மற்றும் 6 பேருக்கும் (£720), பக்கீர்சாமி மற்றும் 9 பேருக்கும் (£825), அமிர்தலிங்கம் மற்றும் 11 பேருக்கும் (£1,240), புஸ்பராணி மற்றும் 22 பேருக்கும் (£2,257) பணம் அனுப்பப்பட்டு உள்ளது. இதைவிடவும் சிலருக்கு £50, £100 தபால் கட்டளை அனுப்பப்பட்டு உள்ளது.

## கைதிகளின் நிலை :

இலங்கையில் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் பல ஆண்டுகளாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர். இந்த சமாதானப் பேச்சுக் காலகட்டத்திலும் இவர்களது விடுதலை தொடர்பாக பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு உள்ளவர்கள் தீவிர கவனம் செலுத்தவில்லை. சட்டத்தரணிகளை நம்பி உள்ள இக்கைதிகளின் குடும்பத்தாரிற்கு இச்சட்டத்தரணிகள் பொறுப்புடன் பதிலளிப்பதில்லை என்றும் பெரும்பாலானவர்கள் முற்றிலும் இதனை ஒரு வியாபார அடிப்படையிலேயே மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சில சட்டத்தரணிகள் தாங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் கைதிகளின் வெளிநாட்டில் உள்ள உறவுகளுடன் நேரடியாகத் தொடர்புகளைப் பெற்று அவர்களிடம் பணம் கறக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவதும் நடந்துள்ளது. ஆனால் இங்கு குற்றம் சாட்டப்பட்ட சட்டத்தரணிகள் அப்பாத்துரை விநாயகமூர்த்தி மற்றும் சிவாஜிலிங்கம் பற்றி அறிந்த சிலருடன் உதயன் தொடர்பு கொண்ட போது அச்சட்டத்தரணிகள் கக்கருத்துக்களை மறுத்துள்ளனர்.

# ஜெயதேவன் - இந்திரகுமார் கூட்டத்தின் விடுதலையில் குற்றம் சாட்டப்பட்டவர்கள்

## தருதலைகள் வெளியிட்ட விடுதலையில்

சட்டத்தரணி நேமிநாதன் - ஜெயதேவனின் முன்னாள் நண்பர்

மூ சிவராஜா - ஜெயதேவனின் முன்னாள் நண்பர். ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற்ற மோசடிக்கு எதிராகத் தீவிரமாகச் செயற்பட்டவர்.

சாந்தகுணவடிவேல் - ஜெயதேவனின் முன்னாள் நண்பர். சிவராஜாவுடன் மிகவும் நெருக்கமாகத் தற்போது செயற்பட்டு வருகிறார்.

கவுன்சிலர் போல் சத்தியநேசன் - பிரித்தானியாவின் முதல் தமிழ் கவுன்சிலர். எப்போதும் மக்களால் அணுகக் கூடிய எளிமையான அரசியல்வாதி. தமிழ் பொது அமைப்புகளில் நிர்வாகச் சீர்கேடுகளை வெளிப்படையாக எதிர்த்து வருபவர்.

கவுன்சிலர் செல்வி எலிசா மன் - பிரித்தானியாவின் முதல் தமிழ் பெண் கவுன்சிலர். இலங்கையில் நடைபெற்ற மனித உரிமைகளுக்காகத் தீவிரமாகக் குரல் கொடுத்தவர். சமூக சேவகி. தமிழர் சமூக வீடமைப்புக் கழகத்தில் ஜெயதேவன் - ராம்ராஜ் கூட்டின் நிர்வாகச் சீர்கேடுகளுக்கு எதிராகத் தீவிரமாகக் குரல் எழுப்பியவர்.

வெளிக்கள அலுவலர் நவநாயகம் - தமிழர் அகதிகள் நடவடிக்கைக் குழுவின் முக்கிய அலுவலர். கடந்த 10 ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான த ஞ ச விண்ணப்பங்களைக் கையாண்டவர். ஈழம் இல்லத்தால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளின் ஒழுங்கமைப்பாளர். ஜெயதேவனுக்கு எதிராக வழக்குகளைக் கொணர்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்க வழி செய்தவர்.

ச ி சிதம்பரப்பிள்ளை - சட்ட நிபுணர். தமிழர் அகதிகள் நடவடிக்கைக் குழுவின் தலைவர். இவ்வமைப்பிலேயே வெளிக்கள அலுவலர் நவநாயகம் பணியாற்றுகிறார். ஜெயதேவன் தனது எதிரியாகக் கருதும் நவநாயகத்தை வேலை நீக்காததால் சி சிதம்பரப்பிள்ளை ஜெயதேவன் - இந்திரகுமார் கூட்டின் தாக்குதலுக்கு உள்ளானார்.

சட்டத்தரனி நகுலேஸ்வரன் - ஜெயவேன் சம்பந்தப்பட்ட வழக்குகளில் எதிர்த் தரப்பு சட்ட நிறுவனமாக நகுலேஸ்வரனின் நாக் அன் கோ வாதிட்டது.

உதயன் நிர்வாகம் - ஜெயதேவனின் ஊழல்களையும், மோசடிகளையும் நீதிமன்ற சாட்சயங்களுடனும் ஆதாரங்களுடனும் வெளியிட்ட, வெளியிட்டு வரும் ஒரே பத்திரிகை.

## சாக்கடையின் விளக்கம்

உதயன் பத்திரிக்கை ஒரு சமூக பத்திரிக்கை. அது வாயை திறந்து வாசிக்கும் வாசகரின் வாய்க்கு ஏற்ப வாசம் வீசும். வாய் சுத்தம் இல்லாமல் வாசிக்கின்றவர்களுக்கு அவர்களின் வாயே அவர்களுக்கு நாறினால் உதயன் எந்தவகையிலும் பொறுப்பாகாது. ஜெயதேவனும் இந்திரக்குமாரும் முதலில் தங்களின் பற்களை நன்ராக தேய்த்து சுத்தமாக வாய்களை கழுவியபின் உதயனை வாசித்தால் அதனுடைய உன்மையான நல்ல வாசம் புரியும். வாய் சுத்தமின்றி அரைகுறையாக வாசித்துவிட்டு உதயனை சாக்கடை பத்திரிக்கை என்று கூறுவது அவர்களின் வாய் மனமே அவர்களுக்கு வீசுகின்றது தெளிவாக உறுதியாகின்றது.

இன்னும் பலரும் ஜெயதேவன் - இந்திரகுமார் கூட்டத்தினால் பழிவாங்கப்பட்டு வருகின்றனர். முழுமையாக அவற்றைப் பிரசுரிப்பதற்கு இடமின்மையால் அவற்றை இங்கு தரமுடியவில்லை.

Graphical Impact
Signs ~ Designs ~ Graphics
61 Hoe Street, Walthamstow, London E17 4SA
Tel 020 8925 2333 Fax 020 8925 2332
www.graphicalimpact.com

DHAMECHA GROUP
ஆட்கள் தேவை
முழுநேர, பகுதிநேர ஊழியர் தேவை
எமது வியாபார விருத்தியின் நிமித்தம் Watford கிளைக்கும் Wembleyக்கும் ஆர்வமுள்ள, கொள்வனவு செய்பவர்களுடன் பேசி அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய திறமை படைத்த தொழிலாளர்கள் கீழ்கண்ட வெற்றிடங்களை பூர்த்தி செய்ய தேவைப்படுகின்றார்கள்:
வெயர் ஹவுஸ் அசிஸ்டன்ஸ் மற்றும் ஃபோர்க்லிப்ட் டிரைவர்கள்
பொருட்களை நிரப்புதலும் வாடிக்கையாளர்களுக்கு உதவி செய்தலும்
செக்அவுட் கொன்ட்ரோலர்கள்
ரசீது ஒன்றிற்கு இரண்டு தடவை சரி பார்த்தலும் செக்அவுட் ஓப்பரேட்டர்களை மேற்பார்வை பார்த்தலும்
அவரவர் முன்னாள் அனுபவத்தை பொறுத்து தரமான சம்பளம் கொடுக்கலாம்.
ஆர்வமுள்ளோர் கீழே உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்:
Dhamecha Group
Wembley Stadium Industrial Estate
First Way
Middx. HA9 0TU
or Call: 020 8903 8181
திங்கள் முதல் வெள்ளி காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம்.
தயவுசெய்து எந்த இடத்தில் வேலை செய்ய விரும்புகின்றீர்கள் என்பதை விண்ணப்பங்கள் பெறும்போது தெரியப்படுத்தவும்.

NKN HALAL MEAT
(தமிழர் இறைச்சிக் கடை)
NEWLY OPEN
வெம்ளியில் புதிதாக திறந்துள்ள NKN Halal Meat கடையில் உங்கள் தேவைக்கேட்ப தரமான இறைச்சி மலிந்த விலையில் வாங்கிடலாம். உங்கள் பார்ட்டி வைபவங்களுக்கு மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும். அதிகமாக வாங்குபவர்களும் 3 மயில்களுக்குள்இலவச டெலிவரி உண்டு.
TEL: 020 8795 3886
297, HARROW ROAD, WEMBLEY
தரமான இலங்கை மரக்கரி வகைகள், மளிகை சாமான்கள் எதிரில் உள்ள எமது JEEN CASH & CARRYல் கிடைக்கும்
TEL: 020 8903 4229

ADVERTISEMENTS

இறையருள் அரசி **அன்னை காயத்ரி**



உங்களின் வாழ்கையில் ஏற்படும் துன்பங்கள் மாறிடவும் தடைகள் யாவும் விலகிடவும் காணுங்கள் அன்னையின் தரிசனம், விலகாத நோய் விலகும், தீராத பிணி அகலும், மாறாத வேதனைகள் யாவும் நீங்கும், உங்களின் பிரச்சனைகள் எதுவாயினும் தடைநீங்கி வழி பெற்றிட தொடர்பு கொள்ளுங்கள்

**020 8952 7775**

---



The UDHAYAN உதயன்

**ADVERTISE FOR BEST RESULTS**

**020 8952 5677**

---

☆ **To Know your Birth Star contact 020 8905 7775** ☆

---

**TRAVLIN STYLE** Low Cost flights / Hotel / Insurance to all Destinations

| | | | | | |
|---|---|---|---|---|---|
| INDIA | £349 | CANADA | £245 | COLOMBO | £365 |
| DUBAI | £250 | NAIROBI | £325 | SOUTH AFRICA | £335 |
| NEWYORK | £145 | ORLANDO | £200 | PARIS | £49 |
| | | LISBON | £120 | | |

All Prices are subject to availability and Airport Taxes. Special Discount to Senior Citizens and Groups to India.
Travelin Style Ltd. 46 Church Road, Stanmore, Middx.HA4 4AH **Tel: 020 8954 0077** Retail agents for Atol holders

---

**NESAN Cash & Carry**

NEWLY OPENED — MANY OPENING OFFERS

* இலங்கை மரக்கறி வகைகள், நிரு, யாழினி, லீலா, TRS தயாரிப்புகள், சமுத்திரா, யாழினி கடல் உணவுகள் யாவும் குறைந்த விலையிலும்
* திருமண ஆடை அலங்காரங்கள் வாடகைக்கும்
* மேலும் பிரதி வாரமும் அதிவிசேட விலைக்கழிவில் பொருட்களும் உண்டு

**SPECIAL OFFERS EACH WEEK**

* ஓடியோ கேஸட், C.Dக்கள் விற்பனைக்கும் உண்டு

வாருங்கள்

**Tel: 020 8574 4018**

**217 The Broadway Southall**

---

**Euro Glazing**

*Windows, Doors, Porches, Conservatories*

உயர்ந்த தரம், நிறைந்த சேவை மற்றும் மிகுந்த சேமிப்புக்கு நாடுங்கள்

020 8574 9494



We give guarantee for our quality products ranges we supply.
Our professional staffs are highly skilled to fit Windows, Doors, Porches, Conservatories...

Just one call away to make your home complete


Unit 7, Barrett Industrial Park, Park Avenue, Southall, Middlesex UB1 3AF
**Tel: 020 8574 9494 Fax: 020 8574 8989**

---

**இந்து தகவல் ஏடு**

இரண்டாம் வெளியீடு 2003

மிக அதிக புதிய விளக்கங்களுடன் விரைவில் வெளிவருகிறது




கண்ணியமான நல்ல நோக்குடன் வெளிவரும் இந்த இந்து சமய தகவல் ஏட்டினை ஒவ்வொருவரும் விரைந்து சென்று பெற்றிடுவீர்

இலவசம் இலவசம் இலவசம்

---

**NET TRY** தமிழ் சூப்பர்மார்க்கெட்

**27 Watling Avenue, Edgware, Middx. HA8 0JD**

புதிய நிர்வாகத்தின் கீழ் **020 8952 5959**

இலங்கையிலிருந்து பெறப்படும் உடனடி மரக்கறி வகைகள், லீலா, நிரு, Fudco உடன் சமுத்திரா கடலுணவுப் பொருட்கள், மதுபான வகைகள், கோயிலுக்கு உரிய பொருட்கள், இதர பல சரக்குப் பொருட்கள், தாயகப் பொருட்கள் யாவும் இங்கு கிடைக்கும்.

தமிழ், ஹிந்தி புதிய பழைய சினிமா வீடியோ கஸட்டுகள், வீ.சீ.டி.கள், டீ.வீ.டி.கள் வாடகைக்கும், ஓடியோ கஸட்டுகள், சீ.டீ.க்கள் விற்பனைக்கும் இங்கு இருக்கின்றன.

---

**Subscribe Udhayan only £10 p.a.**

---

**HARTEX**

ESTABLISHED 1969

THE GREAT OUT DOORS

· COMBAT · PULLOVERS · MAP CASES · THERMAL UNDERWEAR · RAINWEAR · BODY WARMERS · SHORTS · COMPRESSORS BAGS · CLOTHING · BOOTS · COOKWARE · MONEY BELTS · HIKING BOOTS · HAMMOCKS · CUTLERY SETS · PLATES · WEBBING · GLOVES · HEADWEAR · HIKING BOOTS



Competitive prices

55 VICTORIA ROAD
RUISLIP MANOR
MIDDX, HA4 9BS
TEL: 01895 634244

321 NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDX, HA2 8JA
TEL: 020 8864 3333

OPEN 7 DAYS

---



**MULTILINES LIMITED** Designer Bedrooms / Kitchens & Shopfitters

20 YEARS

* DESIGNER BEDROOMS
* KITCHENS
* LOUNGE UNITS
* HOME-STUDY
* TRADITIONAL INDIAN SEATING
* MANDIRS
* BEDS



DELIVERY OF PRODUCTS ONLY WITHIN M25
Unit 1, 255 Water Road, Abbeydale Industrial Estate, Wembley, Middx. HA0 1JW
**Tel: 020 8997 7788 Fax: 020 8997 9988**
E mail: info@multilines.co.uk, Web: www.multilines.co.uk